பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 27 வெள்ளிக்கிழமை 09.02.2018 | கதிர் 96

## மதுபானச்சாலைகள் தேர்தலன்று பூட்டு

கொழும்பு, பெப். 09
நாட்டிலுள்ள அனைத்து மதுபானச்சாலைகளும் நாளை சனிக்கிழமை உள்ளூராட்சித் தேர்தலன்று மூடப்படவுள்ளன என மது வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# நாளை வாக்களிப்பு!

## நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள்

### நள்ளிரவுக்கு முன்பே பெரும்பாலான முடிவுகள்

கொழும்பு, பெப்ரவரி 09
நாடு முழுவதிலும் உள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் உட்பட அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலின் வாக்களிப்பு நாளை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை ஒரே சமயத்தில் நடைபெறுகின்றது. அதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்திருக்கின்றன எனத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.
பெரும்பாலும் அனைத்துத் தேர்தல் முடிவுகளும் நாளை நள்ளிரவுக்கு முன்னர் வெளியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பக்கம் 03


வளர்ப்பு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமான வண. பெல்லன்வில விமலரத்ன தேரரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய மற்றும் சிரேஷ்ட அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா ஆகியோர் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.
கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மைதானத்தில் தேரரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன.

## யாழ். மாவட்டத்தில் இதுவரை தேர்தல் வன்முறை இல்லையாம்!

### தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்தே 40 முறைப்பாடுகள்

- எஸ்.நிதர்ஷன் -
தேர்தல்வன்முறைகள் இடம்பெற்றன என்ற முறைப்பாடுகள் எவையும் யாழில் பதிவு செய்யப்படாத அதே நேரத்தில், தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்து மாத்திரமே நாற்பது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என யாழ்ப்பாண மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது தேர்தல் முறைப் பக்கம் 18

## தனியார் காணிகளை விடுவிக்க படைத் தரப்பு சாதக சமிக்ஞை

### யாழ் அரச அதிபர் நேற்று தகவல்

- எஸ்.நிதர்ஷன் -
யாழ்.மாவட்டத்தில் படையினர் வசமிருக்கின்ற தனியார் காணிகளைவிடுவிப்பதுகுறித்து இராணுவத் தளபதியுடன் நடத்தப்பட்ட பேச்சுகளின் போது சாதகமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன எனவும், இதன் முதற்கட்டமாக அடுத்த சில மாதங்களில் பக்கம் 18

## முன்னணி வேட்பாளர் மீது கொலை வெறித் தாக்குதல்!



யாழ்ப்பாணம், பெப்.09
நாளை நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் வட மராட்சியில் உள்ள பிரதேசசபை ஒன்றில்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் வட்டார வேட்பாளராகப் போட்டியிடும் க.கிரிதரன் என்பவர் மீது நேற்று முன்தினம் இரவு 10 மணியள பக்கம் 18

## லஞ்சம் வாங்கிய வன அதிகாரி

வவுனியா, பெப்.09
வவுனியா - நெடுங்கேணி பிரிவுக்குட்பட்ட வனத் திணைக்கள அதிகாரி லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கொழும்பில் இருந்து வருகை தந்த லஞ்ச ஊழல் தடுப்பு பக்கம் 03




முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தமக்கு நெருக்கமான தமிழ் ஊடகவியலாளர் ஒருவருடன் உரையாடிய சமயம் மன ஆதங்கத்துடன் குறிப்பிட்ட ஒரு விடயத்தை பக்கம் 03

## பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டன், பெப்.09
இலங்கை அரசின் செயற்போக்கைக் கண்டித்து பிரிட்டனில் வாழும் புலம்பெயர் அமைப்புகள் பலஒன்றிணைந்து பக்கம் 03

## வேட்பாளர் பட்டியலில் தங்களின் பெயர் தங்களுக்குத் தெரியாமலேயே சேர்ப்பாம்!

### யாழ் மாவட்டத்தில் இருவர் முறைப்பாடு

- எஸ்.நிதர்ஷன் -
தங்களது அனுமதியின்றி, தங்களுக்குத் தெரியாமல் தங்களது பெயரை வேட்பாளர் பட்டியலில் இணைத்துக் கொண்டுள்ளனர் என ஊர்காவற்றுறை மற்றும் பருத்தித்துறையில் பக்கம் 18

## ஜனாதிபதிக்கு எதிராகவும் ஊழல் மோசடி முறைப்பாடு



கொழும்பு, பெப் .09
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.
லஞ்ச ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவிடம் ஜனாதிபதிக்குஎதிராகமுறைப்பாடுசெய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் உரிமைகளைப் பக்கம் 18

### பிரிகேடியர் மீண்டும் பணியில்;

## மைத்திரியின் முடிவால் சிவில் சமூகம் அதிர்ச்சி!

கொழும்பு, பெப் .09
புலம்பெயர் தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த-லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் - பிரிகேடியர்பிரியங்கபெர பக்கம் 03

## 2ஆயிரம் அரச அதிகாரிகள் வவுனியாவில் தேர்தல்பணி

### 155 பேர் கொழும்பில் இருந்து அழைப்பு

வவுனியா, பெப்.09
வவுனியா மாவட்டத்தில்தேர்தல்கடமைகளில் 2 ஆயிரம் அரச அதிகாரிகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 155 பேர் கொழும்பில் இருந்து அழைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் விசேட அதிரடிப் படையினர், பொலிஸார் உள்ளடங்க பக்கம் 18

## பொன்னாலை - பருத்தித்துறை பஸ் சேவை இன்று முதல் மீண்டும்



யாழ்ப்பாணம், பெப்.09
27 வருடங்களுக்குப் பின்னர் திறக்கப்பட்ட பொன்னாலை - பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து இன்று பக்கம் 18

## தப்பினார் உதயங்க!

### தான் விடுவிக்கப்பட்டாரென அவரே நேற்று அறிவிப்பு



கொழும்பு, பெப் .09
சர்வதேசப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுத்தடுத்துவைக்கப்பட்டிருந்த ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க விடுவிக்கப்பட்டுள்ளார்.
'மிக்' விமானக் கொள்வனவில் இடம்பெற்ற பக்கம் 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அமைதி காக்கும் பணிகளுக்காக லெபனான் செல்லும் இலங்கை ராணுவம்



கொழும்பு, பெப்.09

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுவதற்காக இலங்கை இராணு வத்தின் குழுவொன்று லெபனான் செல்லவுள்ளது.

12 ஆவது பாதுகாப்பு படையே இவ்வாறு லெபனான் பயணமாகவுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு படைப் பிரிவில் 10 அதிகா ரிகள் மற்றும் 140 படையினர் போன்றோர் இலங்கை சிங்கப் படையணி, இலங்கை பொறியியலாளர் படையணி, இயந்திரவியல் காலாட்படையணி, கொமாண்டோ படையணி, விசேட படையணி, பொறியியலாளர் சேவைப் படையணி, இலங்கை இராணுவ சேவைப் படையணி, இலங்கை இராணுவ மருத்துவப் படையணி, இலங்கை மின்சாரவியல் மற்றும் பொறியியல் படையணி, இலங்கை இராணுவ போர்க் கருவிப் படையணி, இலங்கை இராணுவ பொலிஸ் சேவைப் படையணி, மற்றும் இராணுவ ஜெனரல் சேவைப் படையணி போன்ற படையணிகளை முன்னிலைப்படுத்தி கலந்து கொள்ளவுள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இதன் முதல் தரப்பினர் ஏழு அதிகாரிகள் உள்ளடங்கலாக கட்டளை அதிகாரிகள் மற்றும் நாற்பத்து மூன்று படையினர் பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் பயணத்தை மேற்கொள்ள உள்ளனர்.

இந்தக் குழுவிற்கான கட்டளைத் தளபதியான சிங்கப் படையணியின் லெப்டினனட் கேணல் ஆர்.டபிள்யூ. கே. ஹேவகே மற்றும் படையினர் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 18-19 முதல் 6 மார்ச் வரை பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

லெபனான் நாட்டின் பாதுகாப்பு சேவைகள் நக்குரா எனும் பிரதேசத்தில் பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஒத்துழைப்புடன் இடம் பெறுகின்றது.

2010ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் 11 படையினரை லெபனான் நாட்டின் சேவைக்காக வழங்கியிருந்தது. இவை 1978ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் இலங்கை இராணுவம் 2010 ஆம் ஆண்டு ஒரு வீரரை அனுப்பி வைத்தது.

அந்த வகையில் முதல் இலங்கை இராணுவ சிங்கப் படையணியின் படைவீரர்கள் 2012ஆம் ஆண்டு அனுப்பிவைக்கப்பட்டனர். இதன் இரண்டாம் கட்ட பகுதியே இதுவாகும் என இராணுவம் தெரிவித்துள்ளது.

## ஐரோப்பிய ஒன்றிய பண தூய்மையாக்கல் கறுப்பு பட்டியலில் இலங்கை இணைவு!

கொழும்பு, பெப். 09

ஐரோப்பிய ஒன்றிய பண தூய்மையாக்கல் கறுப்புப் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது என புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பின் பின்னர், இலங்கை, துனிசியா, ட்ரெனிடெட் மற்றும் டொபாகோ ஆகிய நாடுகள் கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன என ஐரோப்பிய நாடாளுமன்ற இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியல் தயாரிக்கும்போது, பணம் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி உதவி வழங்கியமை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது, இந்தப் பட்டியலுக்கு ஆதரவாக 357 வாக்குகள் கிடைத்துள்ள நிலையில் அதற்கு எதிராக 283 வாக்குகள் கிடைத்துள்ளன.

மேலும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 26 பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## சர்வதேச கண்காணிப்பாளர்கள் வருகை!

கொழும்பு, பெப். 09

சர்வதேச கண்காணிப் பாளர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 04 நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர்கள் வருகை தந்துள்ளனர்.

மேலும், தேர்தல் கடமைகளுக்காக கொழும்பிலிருந்து 400 அதிகாரிகளைக் கொண்ட விசேட குழுவினர் நாட்டின் பல பகுதிகளுக்கும் செல்லவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தலில் வாக்குப்பதிவு நிலையங்களை ஒருங்கிணைப்பதற்காக இந்த அதிகாரிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு படையெடுத்து வரும் இந்தியச் சுற்றுலாப் பயணிகள்!



கொழும்பு, பெப். 09

இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரியுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டு ஜனவரியில் 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவராக பணியாற்றிவரும் அரிந்தம் பக்ஸி தனது டுவிட்டர் தளத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் 31 ஆயிரத்து 173 ஆக காணப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இவ்வருடம் ஜனவரி மாதத்தில் 43 ஆயிரத்து 643 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான மிக முக்கியமான சுற்றுலா மூலமாக இந்தியா இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், சீனாவின் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என உத்தியோகபூர்வ தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

சீனாவில் இருந்து இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 24 ஆயிரத்து 819 சுற்றுலாப் பயணிகளே இலங்கைக்கு பயணம் மேற் கொண்டுள்ளனர்.

கடந்தாண்டு ஜனவரியிலும் பார்க்க இலங்கைக்கான ஒட்டுமொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 12.6 சதவீதத்தினால் அதிகரித் துள்ளது.

இதன்படி இந்த வருடம் ஜனவரியில் 2 லட்சத்து 46 ஆயிரத்து 972 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த 2017ஆம் ஆண்டில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை முதன்முறையாக இரண்டு மில்லியன் தொகையைத் தாண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## இராமேஸ்வரம் மீனவர்கள் ஏழு பேர் கைது!



கொழும்பு, பெப். 09

கச்சத்தீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 7 பேரையும், ஒரு விசைப்படகையும் நேற்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச் சாட்டில் இந்த 7 தமிழக மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னாரில் உள்ள கடற்படை முகாமுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதேவேளை, ஏற்கனவே இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 159 மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.

## இந்த தேர்தலுக்குப் பின்னர் மைத்திரிக்கு முற்றுப் புள்ளி!

### இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப். 09

தேர்தலின் பின்னர் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு முற்றுப் புள்ளி வைக் கப்படும் என இராஜாங்க அமைச் சர் வசந்த சேனாநாயக்க தெரிவித் துள்ளார்.

பொலனறுவைப் பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேர்தலின் பின்னர் போதைக்கு முற்றுப்புள்ளி வைப்பதனை விடவும் மைத்திரிபால சிறிசேனவிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இன்னும் 18 மாதங்களே பதவியில் நீடிக்க அவகாசம் உண்டு.

அதன் பின்னர் அவர் முடிந்தார். பின்னர் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் கூட கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை இழந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவேனும் தெரிவாகியிருந்தார்.

மைத்திரிபாலவின் பதவிக்காலம் நிறைவடைந்ததன் பின்னர் முற்றுப் புள்ளியாகவே அமையும்.

மைத்திரிபால சிறிசேனவினால் ஊருக்கோ நாட்டுக்கோ நல்லது நடக்கவில்லை என வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (க)

## மஹிந்தவின் மேலதிக செயலாளருக்கு பிணை!

கொழும்பு, பெப். 09

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மேலதிக செயலாளர் கே.டீ. குணரத்னவுக்கு நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்கு வாகனங்களை கொள்வனவு செய்யும் போது 157 இலட்ச ரூபாய் அரச நிதியை மோசடி செய்த சம்பவத்தில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கே. டீ.குணவர்தனவை பிணையில் விடுதலை செய்ய கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று உத்தரவிட்டுள்ளார்.

50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 5 லட்ச ரூபாய் வீதம் 2 சரீரப் பிணையிலும் பிணை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் கணக்காய்வாளர் எல். ஜீ. குணவர்த்தனவின் பிணை மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னாரிலிருந்து தனுஷ்கோடி சென்ற நால்வர் விசாரணையில்



சென்னை, பெப்.09

தமிழகம், தனுஷ்கோடிக்கு மன்னாரிலிருந்து சட்டவிரோதமாகச்சென்ற குடும்பம் ஒன்றிடம் தமிழகப் பொலிஸார்தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தனுஷ்கோடி அரிச்சல்முனைக்கடல்பகுதியில் நேற்று அதிகாலை மன்னார் பகுதியிலிருந்து படகில் சென்று இறங்கிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 மாதக் கர்ப்பிணித்தாய் உட்பட நான்கு பேர் தமிழகப் பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் தீவிர விசாரணைகளைப் பொலிஸார் நடத்தி வருகின்றனர்.

மன்னார் பகுதியைச் சேர்ந்த நிரோசன் (வயது - 28) என்ற குடும்பத்தலைவர், அவரது மனைவி மேரி ஸ்டெல்லா(வயது - 23) அவர்களது ஐந்து வயதுப் பாலகி ஜஸ்மின் மற்றும் சகோதரர் நீகன் ஆகியோரே விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# ராஜீவ் கொலை வழக்குக் கைதிகளை விடுதலை செய்வதற்குப் பரிந்துரை

நன்னடத்தைஅடிப்படையில் நளினி, முருகன், பேரறிவாளன் மற்றும் சாந்தன் ஆகியோரை விடுதலைசெய்ய முடியும்என்று சிறைச்சாலையினர் தமிழக அரசுக்குப் பரிந்துரைத்துள்ளனர்.

எம்.ஜி.ஆர். நூற்றாண்டை முன்னிட்டு நன்னடத்தை அடிப்படையில் கைதிகளை விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் உள்ள மத்திய சிறைகளில் 10 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளை நல்லொழுக்கம்மற்றும் மனிதாபிமான அடிப்படையில்விடுதலைசெய்யப்படுவர் என்று தமிழக அரசின் சுற்றறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, அதற்கான பட்டியல் நாளை 10 ஆம் திகதிக்குள் தமிழக அரசுக்குஅனுப்பிவைக்கப்படவுள்ளது. இந்தப் பட்டியலில்ராஜீவ்காந்திகொலைவழக்கில்கைதுசெய்யப்பட்டுவேலூர் மத்திய சிறைகளில் 26 ஆண்டுகளுக்கு மேலாக தண்டனை அனுபவித்து வரும் நளினி, முருகன், பேரறிவாளன் மற்றும் சாந்தன்ஆகியோரும்இடம்பெற்றுள்ளனர் என்று தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல்; சி.ஐ.டி விசாரணை வேண்டாம்

## நீதிமன்றத்தில் கோரிக்கை

கொழும்பு, பெப்.09

11 இளைஞர்களைக் கடத்திக் காணாமலாக்கியமை தொடர்பிலான வழக்கில் முன்னாள் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க உள்ளிட்ட நபர்களுக்கு எதிரான விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து விலக்கிக் கொள்ளுமாறு நீதிமன்றில் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், முன்னாள் கடற்படைப் பேச்சாளரின் விளக்கமறியல் உத்தரவும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று வழக்கு தவணை அழைக்கப்பட்டபோது சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இந்தக் கோரிக்கைக்குச் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணியால் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. அதன்படி பிரதிவாதி சட்டத்தரணியின் கோரிக்கை தொடர்பில் எதிர்வரும் 22 ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்படும் என நீதிவான் அறிவித்தார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு பரிமாறிக் கொள்ள விரும்புகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்க் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கடந்த திங்களன்று தமது 85 ஆவது வயதைக் கொண்டாடினார்.

கடந்த பல வருடங்களாக அவரது பிறந்த நாளன்று அவருக்குத் தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவிப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ தவறுவதில்லை. அதுவும் அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில், சம்பந்தனுக்கு என்று மாத்திரமல்ல, நாட்டின் முக்கியமான - மூத்த - பிரபலங்களுக்கு காலையில் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிப்பதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தவர் மஹிந்தர். இதற்கென தமது ஜனாதிபதி செயலணியின் கீழ் ஒரு விசேட பிரிவையே அவர் வைத்திருந்தார். காலையில் மஹிந்தர் உடற்பயிற்சி செய்யும் போது இப்பிரிவினர் அவர் முன்பாக ஆஜராவர். தமிழ் ஊடகங்களில் வரும் செய்திகளைப் பார்த்து அவருக்கு விடயங்களைத் தெரிவிக்கும் தமிழ் இணைப்பாளரும் கூட அச்சமயம் அங்கிருக்க வேண்டும்.

ஒரு புறம் அன்றைய தினம் பிறந்த நாள் கொண்டாடும் பிரமுகர்கள் பட்டியலைச் சம்பந்தப்பட்ட பிரிவினர் அவருக்கு வாசித்துக் காட்டுவர். அதில் அவர் விரும்பும் நபர்களுக்கு உடனே தொலைபேசி அழைப்பை எடுத்துக்கொடுப்பது அப்பிரிவின்பணி.

அப்படித் தொலைபேசி அழைப்பில் பேசுவோருடன் இங்கிதமாக பிறந்தநாள் வாழ்த்துக் கூறி, வெடிச் சிரிப்புடன் நான்கு விடயங்களையும் பேசுவார் மஹிந்தர்.

இடையில் கிடைக்கும் நேரத்தில் தமிழ் இணைப்பாளர் அன்றைய தினம் தமிழ்ப் பத்திரிகைகளிலும், ஏனைய ஊடகங்களிலும் வந்த முக்கிய செய்திகளை சிறுகுறிப்பாக அவருக்கு எடுத்துரைக்க வேண்டும்.

அச்சமயம், நான் ஒரு தமிழ் இணையத்தளத்தை ஆரம்பித்திருந்தேன் என்ற செய்தி கொழும்புத் தமிழ் நாளிதழ் ஒன்றில்பிரசுரமாகியிருந்தது. அவரின் தமிழ் இணைப்பாளர் அந்தத் தகவலையும் அவருக்குத் தெரியப்படுத்தியிருப்பார் போலும்.

"ஆ! பழைய 'கொட்டியா' புது 'வெப்' தொடங்குகின்றாரா? அவரையும் வாழ்த்துவோம். எடுங்கள் அழைப்பை!" என்றாராம் மஹிந்தர்.

சற்று நேரத்தில் அவரது தொலைபேசி அழைப்பு எனக்குக் கிட்டியது. நாட்டின் தலைவரிடமிருந்து திடீரென தொலைபேசி அழைப்பு வரும் என நான் எதிர்பார்க்கவில்லை.

எனினும் விரைந்து சுதாரித்துக்கொண்டு பேசினேன். பேச்சு அப்போதைய அரசியல் கள நிலைவரம் பற்றித் திரும்பியது.

"சில தினங்களுக்கு முன்னர் சம்பந்தனுக்கு பிறந்த நாள் வாழ்த்துச் சொல்வதற்காகத் தொலைபேசி அழைப்பு எடுத்தீர்கள் என்று செய்திகள் வந்தன. அதனோடு ஓர் இணக்கப் பேச்சுக்கான சூழலும் உருவாகும் என்று எதிர்பார்த்தோம். நடக்கவில்லையே?" - என்று எமது ஏமாற்றத்தைக் குறிப்பிட்டேன்.

"ஹா... ஹா.." என்று சிரித்தார்.

"உங்கள் பக்கத்தில் இரண்டு வயதானவர்கள் இருக்கின்றார்கள் (சம்பந்தனையும் விக்கியையும் குறிப்பிட்டிருப்பார் போலும்) அவர்கள் இருவரையும் திருத்துங்கள். எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு வந்து விடும்" - என்றார் மஹிந்தர்.

சம்பந்தனுக்கு ஏன் தவறாமல் தாம் பிறந்தநாள் வாழ்த்துக் கூறுகின்றார் என்பதற்கும் ஒரு காரணம் சொன்னார்.

"அவர் இப்போதும் மூத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர். அவருக்கு வாழ்த்துக் கூறினால் முழுத் தமிழருக்கும் வாழ்த்துக் கூறிய மாதிரியிருக்கும் அல்லவா...?" - என்று ஒரு போடும் போட்டார். நான் கிறங்கிப் போனேன்.

அந்த சம்பந்தனுக்கு கடந்த திங்களன்று 85 ஆவது பிறந்த தினம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவரது துணைவியார் மைத்திரி விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய போன்ற எல்லோருக்கும் அன்றைய தினம் திருகோணமலையில் இருந்த சம்பந்தனுக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மட்டும் அந்த வாய்ப்புக் கிட்டவே இல்லை.

மஹிந்தர்தரப்பின் உதவியாளர்கள் காலை முதல் விடாது முயன்றும் சம்பந்தனுடன் தொலைபேசி இணைப்பைப் பெற்றுக் கொள்ள முடியவில்லையாம்.

சம்பந்தனின் மெய்க் காவலர்கள் ஊடாகவும் கூட சம்பந்தனைத் தொடர்புகொள்ள மஹிந்தர் விடாது முயன்றார். ஆனால் சரிவரவில்லை.

தம்மோடு அச்சமயம் தொலைபேசியில் உரையாடினால், அது பற்றிய செய்திகள் ஊடகங்களில் கசிந்து, தேர்தல் சமயத்தில் நிலைமை 'அன்டி கிளைமாக்ஸ்' ஆகிவிடும் எனக் கருதி சம்பந்தன் தன்னோடு தொலைபேசி இணைப்பில் வராமல் தவிர்க்கின்றார் என்ற எண்ணப்பாட்டுடன் அந்த முயற்சியைக் கடைசியில் கைவிட்டிருக்கின்றார் மஹிந்தர்.

"வேறு வழி இருக்கவில்லை. கடைசியாக எனது டுவிட்டரில் அவரை வாழ்த்தி ஒரு பதிவையிட்டேன்" - என்று மேற்படி தமிழ் ஊடகவியலாளரிடம் சம்பந்தனுக்குப்பிறந்தநாள்வாழ்த்துக் கூற முடியாமல் போன தமது ஆதங்கத்தைப் பரிமாறிக் கொண்டார் மஹிந்தர்.

பொது ஜனத்தைக் கவரும் இந்த ஊடாட்ட முறைமைதான் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்தரின் செல்வாக்கைச் சரிய விடாமல் தூக்கி நிறுத்தி வைத்திருக்கின்றது என நினைக்கிறேன்.

- மின்னல் -

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு முழுவதிலும் உள்ள 341 உள்ளூராட்சி சபைகளுக்கும் 8 ஆயிரத்து 293 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நாளை வாக்களிப்பதற்கு சுமார் ஒரு கோடி 58 லட்சம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்து மூன்று ஆண்டுகளின் பின்னர் சந்திக்கும் முதல் தேர்தல் இது. நாட்டின் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்கள் ஒரே சமயத்தில் நடப்பதால் இது ஒரு தேசிய தேர்தலாகக் கருதப்படுகின்றது.

இந்தத் தேர்தலின் முடிவு அடுத்து தேசிய அரசியலின் நகர்வுப் போக்கைத் தீர்மானிக்கும் என்று கருதப்படுகின்றமையால் அரசியல் கட்சிகள் யாவும் இதில் அதிக சிரத்தை காட்டியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னாண்டோவை மீண்டும் பணியாற்ற அனுமதித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடு, பேரதிர்ச்சியாக அமைந்துள்ளதென மனித உரிமைச்செயற்பாட்டாளரும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

இலங்கை சுதந்திரத் தினத்தின்போது லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த புலம்பெயர் தமிழர்களை நோக்கிக் கழுத்தை அறுப்பதைப் போன்று சைகை செய்தார் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகச் செயற்படும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ.

இதனைச்சமூக ஊடகத்தின் மூலமாக மனித உரிமை ஆர்வலர்கள், ஜனநாயகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கண்டித்து விமர்சித்தமையைஅடுத்துபாதுகாப்பு ஆலோசகர் பதவியி லிருந்து பிரிகேடியர் பிரியங்க இடைநிறுத்தப்படுகிறார் என வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

எனினும், பிரிகேடியர் பிரியங்க லண்டனிலுள்ள இலங்கைத்தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகர் பணியை மீளப் பொறுப்பேற்பதற்கான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கலாநிதி பாக்கியசோதிசரவணமுத்து, "ஜனாதிபதியின் செயற்பாடு அதிர்ச்சியளிக்கிறது. படைவீரர்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்படக் கடமைப்பட்டுள்ளவர்கள். அந்த வகையில் ஆர்ப்பாட்டக்காரர்களைநோக்கிக்கழுத்தை அறுப்பதைப் போன்றசைகையை வெளிப்படுத்திக் கொலை அச்சுறுத்தல்விடுத்தமைக்காக, உடனடியாகப் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டு அவருக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுப் பது அவசியமாகும்." - என்றார். (ஐ)

## பிரிட்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்துள்ள பேரணி ஒன்று லண்டனில் இன்று நடைபெறுகின்றது.

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் இருந்து லண்டன் நேரப்படி இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்தப் பேரணி பொதுநலவாய அலுவலகம் முன்பாக முடிவடையும் என பிரித்தானிய தமிழர் பேரவை அறிவித்துள்ளது. (உ)

## லஞ்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு அதிகாரி களால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மரம் வெட்டுவதற்கான அனுமதி வழங்குவதற்கு லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் வவுனியா, நெடுங்கேணி பிரிவுக்குட்பட்ட வெடிவைத்தகல் பகுதியில் வைத்து வவுனியா - ஈரப்பெரியகுளம் பகுதியில் வசிக்கும் 36 வயதுடையவனத்திணைக்கள அதிகாரியேஇவ்வாறுகைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசாரணையின் பின் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்படவுள்ளார் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-100)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை



ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## காத்திருக்கிறது ஜெனீவா நெருக்கடி

நாளை உள்ளூராட்சித் தேர்தல். நள்ளிரவுக்கு முன்னர் தேர்தல் முடிவுகளின் போக்குத் தெளிவாகிவிடும்.

அந்தத் தேர்தல் முடிவுகளோடு புதிய அரசியல் கட்டமைப்புப் போக்குக் கட்டவிழும்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல, தென்னிலங்கையிலும் புதிய அரசியல் செல்நெறி ஒன்று வெளிப்படும் என அவதானிகள் எதிர்வு கூறுகின்றனர்.

அந்தப் போக்கினால் ஏற்படக்கூடிய பரபரப்புகளுக்கு மத்தியில் இன்னொரு புதிய விடயமும் அரங்கேறப்போகின்றது.

உள்ளூராட்சி தேர்தல், அதன் முடிவுகள், அந்த முடிவுகளை அடுத்து வீசப் போகின்ற அரசியல் சூறாவளிகள் போன்றவற்றுக்கு மத்தியில் இந்த விடயமும் இனிச் சூடுபிடிக்கும்.

அது, இந்த மாதம் கடைசி வாரத்தில் ஜெனீவாவில் தொடங்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டமாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பொறிக்குள் வகையாக மாட்டியிருக்கும் இலங்கை, அதிலிருந்து தன்னை எப்படி விடுவித்துக் கொள்ளப் போகின்றது. ஏற்கனவே கொழும்பைக் காப்பாற்றி - காபந்து பண்ணி விடுவிப்பதற்கும் கால அவகாசம் வழங்கி, கொழும்பை ஆசுவாசப்படுத்துவதற்கும் உதவிய தரப்புகள் அந்த வேலையை இனிமேலும் எப்படி செய்யப்போகின்றன என்பவை எல்லாவற்றையும் நாம் காணக்கூடியதாக இருக்கும்.

இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள் போன்றவை குறித்து சர்வதேச பங்களிப்புடன் நீதி, நியாயமான விசாரணைகளை நடத்தல், மீண்டும் அவ்வாறு நிகழாமல் உறுதிப்படுத்தல் என்பன உட்பட பல்வேறு நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் தீர்மானம் ஒன்றை 2015 பெப்ரவரி - மார்ச்சில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றியிருந்தது. இந்த நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு கொழும்புக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கும் இந்தத் தீர்மானத்துக்கான பிரேரணையை முன்மொழிந்த தரப்புகளுள் ஒன்று இலங்கை அரசு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை தானும் சேர்ந்து நிறைவேற்றிய அந்தத் தீர்மான வாசகப்படி உரிய நடவடிக்கைகளை, அந்த உரிய காலத்தில் எடுக்கத் தவறிய நிலையில் அந்த விடயங்களைச் செய்வதற்கு இலங்கைக்கு மேலும் இரண்டு வருட காலம் வழங்கவும், ஒரு வருடம் முடிந்ததும் இலங்கையின் போக்குக் குறித்து கவுன்ஸிலில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கை சமர்ப்பிக்கவும் வழி செய்யும் மற்றொரு பிரேரணை - மீண்டும் இலங்கையின் இணை அனுசரணையோடு- கடந்த ஆண்டு பெப்ரவரி - மார்ச் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைக்கு திரும்பவும் கால அவகாசம் வழங்கும் இந்த யோசனைக்கு ஆதரவும் ஒத்தாசையும் ஊக்குவிப்பும் வழங்கின என்று கருதப்படும் தரப்புகள் குறித்துத் தமிழர் பக்கத்தில் சீற்றமும், எரிச்சலும், விசனமும் கூடத் தெரிவிக்கப்பட்டன.

இந்தப் பின்புலத்தில் மீண்டும் இந்த விவகாரம் இந்தத் தடவையும் கவுன்ஸிலுக்கு வருகின்றது. கடந்த வருடம் மேலும் இரண்டு வருட கால அவகாசம் இலங்கைக்கு வழங்கப்பட்ட பின்னர், தீர்மான விடயங்களை நடைமுறைப்படுத்த போதுமான - நியாயப்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் எவற்றையும் இலங்கை இதுவரை எடுக்காத சூழ்நிலையில், இவ்விடயத்துக்காக கொழும்பு சர்வதேச சமூகத்தின் கடும் கண்டனத்துக்கும் இலக்காகும்; கவுன்ஸிலின் கூட்டத்தில் அந்த விடயம் ஆழமாகப் பிரதிபலிக்கும் என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தீர்மான வாசகங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத கொழும்பைக் கடுமையாகச் சாடும் விதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அவதான அறிக்கை இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

இத்தகைய சர்வதேச நெருக்கடிகள் வரப்போகின்றன என்பதை ஊகித்து, கொழும்பு ஏற்கனவே தற்காப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டது என்றே தோன்றுகின்றது.

2015 பெப்ரவரி - மார்ச்சின் போது அப்போதைய நல்லாட்சி அரசின் இணக்கத்தோடு, இலங்கையும் இணை அனுசரணைத் தரப்பாகச் சேர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம் அப்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவின் நடவடிக்கை என்றும்-

அதனால்தான் அவரை வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து தாம் மாற்றினார் என்றும்-

இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பு தொலைக்காட்சி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருக்கின்றமையை, இத்தகைய தற்காப்பு- முன்னெச்சரிக்கை - சமாளிப்புக்கான பூர்வாங்க எத்தனமாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது.

# இலங்கை - எதியோப்பியா இடையே நல்லுறவு மேம்படுத்தப்படும்!



கொழும்பு, பெப்.09

இலங்கையுடனான நல்லுறவை மேம்படுத்துவதற்காக எதியோப்பிய அரசு எதிர்பார்த்துள்ளது என ஆசிய மற்றும் ஒசியானியா பிரிவின் பணிப்பாளர் நாயகம் Tsegab Kebebew தெரிவித்துள்ளார்.

எதியோப்பியா இலங்கையுடன் அரசியல், பொருளாதாரம், கலாசாரம் உள்ளிட்ட விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் திட்டமிட்டுள்ளது.

எதியோப்பிய தூதுரகத்தில் இடம் பெற்ற இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினவைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஆசிய மற்றும் ஒசியானியா பிரிவின் பணிப்பாளர் நாயகம் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான எதியோப்பியத் தூதுவர் சுமித் திசாநாயக்க குறிப்பிடுகையில்–

இலங்கைக்கும் எதியோப்பியாவிற்கும் இடையில் கடந்த சில வருடகாலமாக ஏற்பட்ட நல்லுறவின் முன்னேற்றம் தொடர்பாக விவரித்தார்.

## இந்திய – இலங்கை 7 ஆவது பாதுகாப்புக் கலந்துரையாடல்!



கொழும்பு, பெப். 09

இந்திய – இலங்கை கடற் படை அதிகாரிகளுக்கிடையிலான பாதுகாப்புக் கலந்துரையாடல் 7ஆவது தடவையாக கொழும்பில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் வெற்றி கரமாக நிறைவு பெற்ற இந்தப் பாதுகாப்புக் கலந்துரையாடலில், கடற்படை நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பியால் டி சில்வா தலைமையிலான இலங்கைக் குழுவினரும் ரியர் அட்மிரல் திரேன் விக் தலைமையிலான இந்தியக் குழுவினரும் பங்குபற்றினர்.

அயல் நாடுகள் என்ற வகையில் இருநாடுகளுக்கும் இடையிலான கடற்பாதுகாப்பு, உறவுகளை மேம்படுத்தல் போன்ற விடயங்களைப் பரிமாறிக் கொள்வதே இந்தக் கலந்துரையாடலின் முக்கிய இலக்காக அமைந்தது.

இந்து சமுத்திரத்தில் ஒத்துழைப்பு, ஒன்றிணைந்த செயற்பாடு ஆகியவற்றின் மூலம் பிராந்தியத்தில் செயல் திறன் மிக்க கடல்வழிப் பாதுகாப்பை நிலைநாட்டுவதற்காக இரு தரப்பினரும் பரஸ்பரம் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் தொடர்பாகவும் இதன்போது கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## தூர இடங்களிலுள்ள சிரேஷ்ட அதிகாரிகள் தேர்தல் கடமைக்கு பயணம்!

கொழும்பு, பெப். 09

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடமைகளுக்காக தூர இடங்களில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகள் பலர் குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையங்களுக்குக் கடமைகளைப் பொறுப்பேற்க நேற்றுப் பயணமாகினர்.

தேர்தல் தினத்திற்கு முதல் நாளான இன்று சிரேஷ்ட அதிகாரிகளும் ஆண் உத்தியோகத்தர்கள் அனைவரும் கட்டாயம் தங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இன்று மாலை ஒத்திகை நடைபெறவுள்ளது. எழுதுவினைஞர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன.

பெண் உத்தியோகத்தர்கள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அறிக்கையை பதிவு செய்து விட்டு தேர்தல் நடைபெறும் தினத்தன்று கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு வாக்களிப்பு நிலையத்தில் 1,200 வாக்குகளுக்குக் குறைந்த வாக்காளர்கள் இருக்கும் பட்சத்தில் வாக்களிப்பதற்கு வசதியாக ஒரு வரிசை மாத்திரமே அமைக்கப்படும்.

1,200 இற்கு மேற்பட்ட வாக்காளர்கள் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் ஏற்பாடாகியிருக்கும் நிலையத்தில் வாக்களிப்பதற்கு வசதியாக இரு வரிசைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று தேர்தல்கள் ஆணைக்குழு, சம்பந்தப்பட்ட தேர்தல் வாக்களிப்பு நிலையத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளது.

# மன உணர்வுக்கு ஏற்ப தேர்தலில் வாக்களிப்போம்!

### இந்து சமயப் பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.09

நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் அனைவரும் தமக்குரிய வாக்குரிமையை தமது மன உணர்வுக்கு ஏற்ப துணிந்து பிரயோகிப்பதன் மூலம் இந்த நாட்டில் ஜனநாயகம் தழைப்பதற்கு வழி ஏற்படும். வாக்கைப் பிரயோகிக்கத் தவறினால் எமது மன உணர்வுக்கு எதிரானவர்கள். அதிகாரத்தைக் கைப்பற்ற வழி ஏற்படலாம். ஆகையால் அனைவரும் தமது மத,மொழி கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும் செயற்றிறனை துல்லியமாக வெளிக்கொணரக் கூடியவர்களையும் தேர்ந்தெடுக்க இந்த நாளைப் பயன்படுத்த வேண்டியது அவசியமானதாகும்.

- இவ்வாறு யாழ். இந்து சமயப் பேரவையின் சார்பில் அதன் செயலாளர் சி.சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்–

ஜனநாயக நாட்டில் ஆட்சிஅதிகாரம் மக்கள் கையிலுண்டு என்பதை உணர்வுபூர்வமாக தெரிவிக்கும் அற்புதமான நாளாகவே தேர்தல் காலங்களை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். எவரும் ஒரு வருடைய வாக்குரிமையைத் தடுக்கும் வகையில் அல்லது திசை திருப்பும் வகையில் யுக்திகளைக் கையாள்வது தெய்வ கீர்த்திக்கு முரணான செயலாகவே கருத வேண்டியுள்ளது.

அனைவரும் அணி திரண்டு வாக்களிப்பதன் மூலம் அபிவிருத்தித் திறனுள்ள, ஜனநாயகத்தைப் பேணுகின்ற நிர்வாக அலகுகளை உருவாக்க களமமைத்தவர்களாக மாறிட வாய்ப்பேற்படுகின்றது.

வாக்களிக்கும் நாளில் எந்த ஒருவரிடமோ தமது விருப்பு வெறுப்புகளுக்கேற்ப கருத்துக் கூறுவதை மனச்சாட்சிப் படி தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே எமது பெரு விருப்பாகும்.

இதுவரையும் கொள்கைகளையும் இலட்சியங்களையும் பரப்புரைசெய்து மக்கள் சிந்தனைக்கு விட்டு விட்டோம். அவர்களின் தீர்ப்பை மகேஸ்வரனின் தீர்ப்பாக ஏற்கும் மனோபாவத்தை தம்மில் தாம் வளர்த்துக் கொள்வது மாபெரும் தர்மம் என்றே கருதுகின்றோம்.- என்றுள்ளது. (இ)

## நாளை

10.02.2018
சனிக்கிழமை

நட்சத்திரம்: கேட்டை மு.இ.10.32வரை
திதி :தசமி மா. 5.45 வரை
சுபநேரம்: 3.34 – 5.04 வரை
இராகுகாலம்: 9.34 – 11.04 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரிகேடியர் பிரியங்கவை இடைநிறுத்திய அதிகாரிகளை கண்டித்தாராம் ஜனாதிபதி!

கொழும்பு, பெப். 09

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் இருந்து பிரிகேடியர் பிரியங்க பெர்னண்டோவை நீக்கியதற்கு மைத்திரி பாலசிறிசேன, வெளிவிவகார அமைச் சின் அதிகாரிகளைக் கடுமையாகக்கண்டித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டகாணொலி வெளியானதை அடுத்து, பிரிகேடியர் பிரியந்த பெர்னாண்டோவை, பாதுகாப்பு ஆலோசகர் பணியில் இருந்து இடைநிறுத்துகிறோம் என இலங்கை வெளிவிவகார அமைச்சு கடந்த செவ்வாயன்று அறிவித்திருந்தது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் இந்த உத்தரவை நேற்று முன்தினம் ரத்துச்செய்த ஜனாதிபதி மைத்திரி, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும் உடனடியாகப் பணியில் இணைந்து கொள்ளுமாறும் அறிவித்திருந்தார்.

வெளிவிவகார அமைச்சுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் அவர் எழுத்துமூலம் தனது உத்தரவை பிறப்பித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.





பிரிகேடியர் பிரியங்க பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டதால் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன எரிச்சலடைந்தார் என்றும் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்த வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளைகண்டித்துள்ளார் என்றும் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பணி இடைநிறுத்தம் செய்வதற்கு முன்னர் வெளி விவகார அமைச்சின் அதிகாரிகள் தம்முடன் கலந்தாலோசனை நடத்தியிருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார் என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, இந்த விவகாரத்தில் ஜனாதிபதியை தலையிடுமாறு முன்னாள் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

மேற்குலகையும், புலம்பெயர் தமிழர்களையும் திருப்திப்படுத்தும் வகையில் வெளிவிவகார அமைச்சு செயற்பட்டுள்ளதால், அவசரமாகத் தலையீடு செய்யுமாறு தாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தமையை விஜேதாச ராஜபக்ஷ உறுதிப்படுத்தியுள்ளார். (க)

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் இதுவரை 321 முறைப்பாடுகள் பதிவு!



கொழும்பு, பெப்.09

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் இதுவரை 321 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த தகவலை சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) நேற்று வெளியிட்டுள்ளது.

இதன்படி தேர்தல் சட்ட விதிகளை மீறிய சம்பவங்களாக243 முறைப்பாடுகளும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 78 முறைப்பாடுகளும் கிடைத்திருக்கின்றன என 'கபே 'அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சொத்துக்களை ஈடுபடுத்துதல், அரச இட மாற்றங்கள் தொடர்பாக 68 முறைப்பாடுகளும், சட்ட விரோத பிரசார நடவடிக்கைகள் குறித்து 145 முறைப்பாடுகளும், பொருள் விநியோகம் தொடர்பில் 14 முறைப்பாடுகளும் மற்றும் ஏனைய 16 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவை தவிர, சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் 24 முறைப்பாடுகளும், தாக்குதலும், அச்சுறுத்தலும் ஏற்படுத்தியமை குறித்து 52 முறைப்பாடுகளும், ஏனைய 2 சம்பவங்களான முறைப்பாடுகளுமாக மொத்தம் 321 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என 'கபே' அமைப்புத் தெரிவிக்கிறது.

## தெற்கு அபிவிருத்தி வேலைத் திட்டம் அடுத்த மாதம் என பிரதமர் அறிவிப்பு!

கொழும்பு, பெப்.09

தெற்குஅபிவிருத்திவேலைத் திட்டத்தை அடுத்த மாதம் வெளியிடப் போகிறோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

தெற்கு அபிவிருத்தியின் பிரதான அபிலாஷை கைத்தொழில் மயமாக்கலாகும்.

இதற்கமைய கொழும்புக்கு அடுத்தபடியாக சிறப்பாக திகழக்கூடிய கைத்தொழில் மயமாக்கத்திற்கு வித்திடப் போகிறோம் எனப் பிரதமர் கூறினார்.



ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக காலி, மாத்தறை பிரதேசங்களில் பெரும் அபிவிருத்தி வலயங்கள் ஏற்படுத்தப்படும். சிங்கராஜவனமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

தெற்கு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பெருந்தோட்டத்துறையிலும், விவசாயத்துறையிலும் இது வரை காணாத அபிவிருத்தி ஏற்படுத்தப்படும் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

## சாவகச்சேரியில் இலவச யோகாசனப் பயிற்சி நெறி

தென்மராட்சி, பெப்.09

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் கலாசார அதிகார சபையின் அனுசரணையில் இலவச யோகாசனப் பயிற்சி நெறி வாரத்தின் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் இடம்பெற்று வருகின்றன.

டச்சு வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பழனியாண்டவர் ஆலய அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை ந.சிவனேஸ்வரராஜா நெறிப்படுத்தலில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிகழ்வில் சிறுவர், பெரியோர் மற்றும் ஆண், பெண் இருபாலாரும் கலந்து பயன் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(இ)

## 345நாள்களைகடந்தும்தீர்வின்றித்தொடரும் கேப்பாபிலவு மக்களின் நில மீட்புப் போராட்டம்!

வவுனியா, பெப். 09

கேப்பாபிலவு பூர்விக கிராமத்தை மீட்பதற்காக கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலமீட்பு போராட்டம் நேற்று 344 ஆவது நாளையும் கடந்து தொடர்கிறது.

கேப்பாபிலவு மக்களுக்கு சொந்தமான காணிகளில் படையினர் அபகரித்துள்ள காணிகளில் இருந்து 133.4 ஏக்கர் காணிகள் கடந்த வருடம் மார்கழி 28 ஆம் திகதி மக்கள் முன்னிலையில் படைத்தரப்பில் இருந்து மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது கேப்பாபிலவு பகுதியில் 111.5 ஏக்கர் காணிகளும் சீனியாமோட்டைப் பகுதியில் 21.84 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 133.34 ஏக்கர் காணிகள் கையளிக்கப்பட்டன. இந்தக் காணிகளுக்குள் கடந்த முதலாம் திகதி மக்கள் சென்றனர்.

இந்த நிலையில், இன்னும் தமது காணிகளில் விடுவிக்க வேண்டியுள்ள 104 குடும்பங்களுக்கு சொந்தமான 18[illegible] ஏக்கர் காணிகளை விடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்து நேற்று 344 ஆவது நாளாகவும் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த செவ்வாயன்று கேப்பாபிலவு மக்கள் சிலர் வடமாகாணத்தில் முதலமைச்சருடைய அலுவல கத்தில் சென்று முதலமைச்சர் மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது [illegible] காணிகள் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் கால எல்லைகள் எவையும் குறிப்பிட வில்லை எனவும் தெரிவித்த மக்கள் விரைவில் தம்மை குடியேற்றுமாறும் அதுவரை தமது போராட்டம் தொடருமெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, சுதந்திர தினத்தில் தாம் போராட்டம் செய்தபோது தம்மை பொலிஸார் நடத்திய விதம் மற்றும் தம்மை கெட்ட வார்த்தைகளால் திட்டியமைக்கு கடும் விசனம் வெளியிட்டதோடு சிறுவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்தியமை தொடர்பில் தம்மை விமர்சித்தனர் எனவும் தாம் போராடும் போது தமது பிள்ளைகள் எங்கே போவது நாம் விரும்பி வந்து வீதியில் இருக்கவில்லை அரசு எம்மை வீதியில் இருக்க நிர்ப்பந்தித்துள்ளது.

எனவே, எமது காணிகளை தந்தால் நாமும் சந்தோசமாக வாழ்வோம் எமக்கு வீதியில் இருக்க ஆசை இல்லை எனவும் புலம்பெயர் வாழ் தமிழர்கள் எமக்காக குரல் கொடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

(கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேகநபர் விளக்கமறியலில்

அம்பாறை, சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்தை, வளத்தாப்பிட்டிப் பிரதேசத்தில் 06 வயதுச் சிறுமி ஒருவரை, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபரொருவரை, எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, சம்மாந்துறை நீதிவான் எச்.எம்.எம். பஸீல், நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

வீடு கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர், சிறுமியின் தாய், மரண வீடொன்றுக்குச் சென்ற வேளையில், தனிமையில் இருந்த சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சிறுமியின் தாயாரால், சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் எச்.எம்.எம். பஸீல் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமி, சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### இம்முறை வாக்குச் சீட்டு

## மட்டக்களப்பு – அதிநீளம் பாணாந்துறை – சிறியது



சனிக்கிழமை பெப்ரவரி 10ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இடம்பெறப் போகின்ற நாட்டிலுள்ள 276 பிரதேச சபைகள், 24 மாநகர சபைகள், 41நகர சபைகள் உள்ளிட்ட 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மட்டக்களப்பு மற்றும் மூதூர் ஆகிய இரு இடங்களிலேயே அதி நீளமான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மிகச் சிறியதான வாக்குச் சீட்டு பாணந்துறை நகர சபைக்காக போட்டியிடும் கட்சிகள் மற்றும் 3 சுயேச்சைக் குழுக்களை உள்ளடக்கியதாக அச்சிடப்பட்டுள்ளது.

அதி நீளமானது என்ற அடிப்படையில் மட்டக்களப்பில் மட்டக்களப்பு மாநகர சபைக்காக 11 அரசியல் கட்சிகள் 5 சுயேச்சைக் குழுக்கள் உள்ளிட்ட 16 போட்டித் தரப்புக்களை உள்ளடக்கிய வாக்குச் சீட்டும், அதேபோல மூதூரில் 14 அரசியல் கட்சிகள் மற்றும் 2 சுயேச்சைக் குழுக்களுடன் 16 போட்டித் தரப்பாரை உள்ளடக்கிய நீளமான வாக்குச் சீட்டும் அச்சடிக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு மாநகர சபைக்கு 33 உறுப்பினர்களும் மூதூர் பிரதேச சபைக்கு 21உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மகளைக் கொடுமைப்படுத்திய தந்தைக்கு அபராதம் விதிப்பு

திருகோணமலை – உப்புவெளிப் பகுதியில் தனது மகளைத் தாக்கிக் காயப்படுத்திய தந்தைக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பத்தாயிரம் ரூபாய் நஷ்டஈடு செலுத்துமாறும் அத் தொகையை செலுத்தாத பட்சத்தில் பத்து மாத சிறைதண்டனையும், இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் தண்டப்பணமும் அத்தொகையை செலுத்தாத பட்சத்தில் மூன்று மாத சிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை திருகோணமலை உயர் நீதி மன்ற நீதிபதி ஏ.பிரேமசங்கர் நேற்றுமுன்தினம் பிறப்பித்துள்ளார்.

திருகோணமலை, உப்புவெளி, விஜித்தபுர, பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நபர் கடந்த 2015 ஆம் ஆண்டு சாராயம் குடித்து விட்டு வீட்டுக்குச் சென்று தனது பதினைந்து வயதுடைய மகளைத் தாக்கிக் காயப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (பு)

## காட்டில் மரங்களை வெட்டிய இருவருக்கு விளக்கமறியல்

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காட்டில் பச்சை மரங்கள் வெட்டிய இருவரை இம்மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கந்தளாய், வான்எல பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 48 வயதுடைய இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் ஜயந்திபுர காட்டுப் பகுதியில் பச்சை மரங்களை வெட்டியபோதே பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு கந்தளாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களைப் பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ப)

## கசிப்புடன் ஒருவர் கைது

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐந்து போத்தல் கசிப்புடன் ஒருவரை நேற்றுமுன்தினம் மாலை கைது செய்துள்ளோம் எனத் திருகோணமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலையூற்றுத் திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பாலையூற்றுப் பகுதியில் திருட்டுத் தனமாக வடிசாராயம் விற்பனை செய்து வருகின்றார் எனப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஐந்து போத்தல் வடிசாராயத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வேட்பாளர் மீது தாக்குதல்

காத்தான்குடி, ஆரையம்பதியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆரையம்பதி பிரதேச சபைக்கான வேட்பாளர் மீது, கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரையம்பதி 2ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர் சாமித்தம்பி சிவசுந்தரம் என்பவரே, தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், ஆரையம்பதி மாவட்ட வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமரசிங்கம் வீதியைச் சேர்ந்த இவரது குடும்பத்தினரும் அச்சுறுத்தப்பட்டுள்ளனரென, பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது கட்சிக்கு ஆதரவு வேண்டிப் பிரசாரக் கூட்டத்தை முடித்துவிட்டு, வீடு திரும்புகையில், வேறொரு கட்சி ஆதரவாளர்களால் தான் தாக்குதலுக்கு இலக்கானேன் என வேட்பாளர் சிவசுந்தரம் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக, காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மு.கா. எழுச்சி மாநாட்டில் கல்வீச்சு 12 சிறுவர்கள் பிணையில் விடுதலை

சாய்ந்தமருது பிரதேசத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சி மாநாட்டின்போது குழப்பம் விளைவிக்க முற்பட்ட குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 21 பேரில் 12 சிறுவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ''மாண்புறும் சாய்ந்தமருது'' எழுச்சி மாநாடு கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் நடைபெற்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அன்றைய தினம் சாய்ந்தமருதில் ஹர்த்தால், கடையடைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதேவேளை மாநாட்டின் கட்சித் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் உரையுடன்நிறைவடைந்த நிலையில் அங்கு கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் உட்படச் சிலர் காயமடைந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கண்ணீர்ப் புகைத் தாக்குதல்களை மேற்கொண்ட பொலிஸார் அவ்விடத்தில் 21 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர். இவர்கள் மறுநாள் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்னமாரப்பன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதன் பின்னர் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுள் 18 வயதுக்குட்பட்ட 12 சிறுவர்கள் அடங்குகின்றனர் எனவும் அவர்கள் இச்சம்பவத்தில் எவ்வித தொடர்புமில்லாதவர்கள் எனவும் அவர்கள் பாடசாலைக்கு செல்ல வேண்டிய மாணவர்கள் எனவும் தெரிவித்து அவர்களை விடுவிக்குமாறு கோரி விசேட பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதனை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.எம்.றிஸ்வான், 12 சிறுவர்களையும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம், இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரிகேடியர் பிரியங்க மீண்டும் பணியில்

# ஜனாதிபதியின் உத்தரவு குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை!

கொழும்பு, பெப்.09

பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும் பணியில் அமர்த்தும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவு தொடர்பாக தமக்கு ஏதும் தெரியாது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்தும்வகையில்செயற்பட்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை, பாதுகாப்பு ஆலோசகர் பணியில் இருந்து இடைநிறுத்துவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு கடந்த செவ்வாயன்று அறிவித்திருந்தது.



வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு

எனினும், இந்த உத்தரவை ரத்துச் செய்து, மீண்டும் அவரைப் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார்.

இதுதொடர்பாக இலங்கை வெளிவிவகாரச் செயலருக்கு, ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன அறிவித்திருந்தார்.

ஆனால், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும்பணியில்சேர்க்கும் ஜனாதிபதி மைத்திரியின் உத்தரவு தொடர்பாக தமக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷினி கொலன்ன தெரிவித்துள்ளார்.

## வட மாகாணத்தில் மழை பெய்யுமாம்



கொழும்பு, பெப். 09

நாட்டின் பெரும்பாலான மாகாணங்களின் சில பகுதிகளிலும் வடமாகாணத்திலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பிற்பகல் 2 மணியின் பின்னர் பல இடங்களில் பெய்யக்கூடும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்கரையோர பிரதேசங்களில் காலை வேளைகளில் ஓரளவு மழை பெய்யக் கூடும்.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டத்திலும் சுமார் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

சப்ரகமுவ, மேற்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளைகளில் பனியுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படும் என்றும் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். இடிமின்னலிலிருந்து பொதுமக்கள் அவதானமாகச் செயற்படுமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

## நுவரெலியா மாவட்டத்தில் 125 தேர்தல் முறைப்பாடுகள்

கொழும்பு, பெப். 09

நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் இது வரையில் 125 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனினும், மோசமான சம்பவம் எனக் குறிப்பிட்டு கூறத்தக்க வகையில் எதுவும் முறைப்பாடு செய்யப்படவில்லை என்றும் நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்ட செயலாளருமான ஆர்.எம்.பி. புஸ்பகுமார தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்த தேர்தல் பிரசாரம் வரை சிறு சிறு முறைப்பாடுகளாக 125 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னர் வேட்பாளர்களால் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பிரசாரங்களின் போது, வேட்பாளருக்கு ஆதரவு தேடி 10 பேர் மாத்திரமே செல்லலாம் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருந்த போதிலும், தேர்தல் சட்டத்துக்கு மாறாக 10 இற்கும் மேற்பட்ட நபர்கள் வேட்பாளருக்கு ஆதரவு தேடி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான முறைப்பாடுகளே அதிகமாக பதிவாகியுள்ளன.இது தொடர்பில் விசாரணைகளை பொலிஸாரும், தேர்தல் அலுவலர்களும் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பாதுகாப்பு கடமைகளில் 66 ஆயிரம் பொலிஸார்!

கொழும்பு, பெப். 09

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்கான பாதுகாப்புக் கடமைகளில் சுமார் 66 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுவார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.பி. நுவன் குணசேகர தெரிவித்தார்.

இவர்களுடன் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த ஆறாயிரம் பேர் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இவர்கள் இன்று கடமைகளை தொடங்குவார்கள் என குணசேகர கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

முப்படைகளை தேர்தல் வாக்களிப்புக்கு பின்னர் கடமையில் ஈடுபடுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேவை ஏற்படும் பட்சத்தில் விசேட அதிரடிப் படையினரின் சேவையைப் பெறலாம் என தேர்தல்கள் ஆணைக்குழு



ஆலோசனை வழங்கியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான சகல பிரசார நடவடிக்கைகளும் முடிவடைய வேண்டும். வேட்பாளர்கள் வீடுவீடாகச் சென்று வாக்குக் கேட்க முடியாது.

தமது அலுவலகங்களில் கட்சி சின்னங்களையோ, கொடிகளையோ காட்சிப்படுத்த முடியாது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

(கு)

## நீர்கொழும்பு பகுதியில் வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, பெப். 09

நீர்கொழும்பு பொலிஸ் எல்லைப் பிரதேசத்திற்குட்பட்ட கடோல்கெலே என்ற இடத்தில் குடிவரவு குடியகல்வு சட்டவிதிகளுக்கு மாறாக விசா அனுமதி இன்றி தங்கியிருந்த வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.



27 வயதான இவர் ஸிம்பாப்வே நாட்டைச் சேர்ந்தவராவார்.

இவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தேர்தல் கடமைகளுக்குச் சமுகமளிக்கத் தவறும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, பெப். 09

நியமனக் கடிதங்கள் பெற்ற அரச அதிகாரிகள் தேர்தல் கடமைக்குச் சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மெஹமட் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடாத அரசியல் அதிகாரிகளுக்கு எதிராக, அரசமைப்பின் 104 ஆவது உறுப்



புரிமைக்கு அமைய 3 வருட சிறைத்தண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்ட அரச வாகனங்களை, அரச அதிகாரிகள் விடுவிக்க மறுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(கு)

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்: நுவரெலியாவில் ஏற்பாடுகள் நிறைவு

கொழும்பு, பெப். 09

நுவரெலியா மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்ட செயலாளருமான ஆர்.எம்.பி.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

2018 ஆம் ஆண்டுக்காக நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக நுவரெலியா மாவட்டத்தில் 306 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 5 லட்சத்து 62 ஆயிரத்து 25 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா மாநகர சபை, தலவாக்கலை லிந்துலை மற்றும் ஹற்றன் டிக்கோயா ஆகிய நகர சபைகளுக்கும், வலப்பனை, ஹங்குரன்கெத்த, நுவரெலியா, அம்பகமுவ, கொத்மலை மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட கொட்டகலை, அக்கரபத்தனை, நோர்வூட், மஸ்கெலியா ஆகிய பிரதேச சபைகளுக்குமான 504 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

மேலும், 490 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் 7 ஆயிரத்து 479 பேர் கடமையாற்றவுள்ளனர், பாதுகாப்புக்காக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸாரும் 1572 பேர் கட



மையில் ஈடுபடவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா கும்பாபிஷேகம்

பண்டத்தரிப்பு, பெப்.09

மாதகல் அரசடி சித்தி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் 7 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (இ)

## தினசரி ராசி பலன் (09.02.2018)

2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை நவமித்திதி பகல் 12.16மணி வரை பின்னர் தசமி. நட்சத்திரம் அனுஷம் மாலை 4.55 மணி வரை பின்னர் கேட்டை. சித்தயோகம் பகல் 12.16 வரை. பின்னர் அசுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 10.56 மணி முதல் 12.24 மணி வரை
**சுபநேரம்** - காலை 6.31 மணி முதல் 8.01 மணி வரை
**திவசம் செய்ய வேண்டிய திதி**- தைமாத தேய்பிறை தசமி

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** அனுஷம்

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். தேகாரோக்கியம் பாதிப்புறும். குடும்பத்தில் தேவையற்ற செலவுகள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியைத் தரும்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவேண்டிய பணம் வரத்தாமதமாகும். தேக நலம் பாதிப்புறும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் ஓரளவு அமைதி காணப்படும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பண வரவு அதிகரிக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளால் வியாபாரிகள் முன்னேற்றமடைவார்கள்.

**கடகம்** யோகமான நாள். தனலாபம்அதிகரிக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் சிலருக்கு நிறைவேறும். சிலர் தொழில் கிடைத்து தூர தேசம் செல்ல ஆயத்தமாவார்கள்.

**சிம்மம்** கவலையான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்கள் உண்டாகும். கடந்த காலத்தை விடத் தொழிலில் சிரமம் உண்டாகும். பலரின் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும்

**கன்னி** மத்திமமான நாள். பொருளாதாரம் சமமாக இருக்கும். செய்யும் தொழிலில் கவனம் தேவை. கொடுக்கல், வாங்கலைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் உயர் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

**துலாம்** சுபீட்சமான நாள். பணம் எல்லா வழிகளாலும் வந்து சேரும். கனவுகளை நிறைவேற்றிக் கொள்ளும் நாளாக அமையும். குடும்பத்தில் சுபகாரியம் இனிதாக நிறைவேறும். செய்யும் தொழிலில் வளர்ச்சி அடைவார்கள்.

**விருச்சிகம்** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். உறவுகள் பலப்படும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். அரச வழியால் பல நன்மைகளைப் பெறுவார்கள். பூர்வீக சொத்துக்கள் தடையின்றி வந்து சேரும்.

**தனுசு** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். ஒரு காரியத்தை பலமுறை செய்ய வேண்டி வரும். சொந்த வெறுப்பு, விருப்புக்களால் சிலர் சிரமங்கள் அடைய வேண்டி வரும்.

**மகரம்** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சியும், மேன்மையும் அடைவார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**கும்பம்** விருத்தியான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். முதலீடு இல்லாத தொழிலில் கூடுதல் லாபம் பெறுவார்கள். புதிய வேலைவாய்ப்புக்களும், அரசாங்க வேலை வாய்ப்புக்களும் அமையும்.

**மீனம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். பெண்களின் தொழிலில் வளர்ச்சி கிடைக்கும். இவர்களின் முயற்சிகளுக்கு நல்ல பயன் கிடைக்கும். சகோதர உறவு பலப்படும். .

சந்திராட்டமநாள்: அசுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# முறையான விசாரணைகள் நடப்பதால் அரசை கவிழ்க்க சதி என்கிறார் ராஜித!



விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்படுவதால் தான் முன்னாள் ஜனாதிபதி ஒவ்வொரு பிரதேச சபையாக சென்று அரசை கவிழ்க்க முயற்சி செய்கிறார் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம்சாட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒருவரும் மற்றும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரும் விரைவில் கைது செய்யப்படவுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

இதன்படி சந்தேக நபர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் துரிதமாக கைது செய்யப்படவுள்ளார்கள் எனவும் களுத்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# விளையாட்டுக் கல்வி பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தால் நடத்தப்படும் விளையாட்டுக் கல்விப் பாடநெறி களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தால் நடத்தப்படும் பூப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் உயர் பாடநெறி, விளையாட்டு விஞ்ஞானம், சான்றிதழ் பாடநெறி, யோகக் கலை மற்றும் இயற்கைச் சிகிச்சையியல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி, விளையாட்டு டிப்ளோமா பாடநெறி, பயிற்றுவிப்பாளர் ஆற்றுகை அபிவிருத்தி பாடநெறி ஆகியவற்றுக்கு பயிலுநர்களை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிகள் தொடர்பான மேலதிக தகவல்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை www.nissg-o-v.lk என்ற இணையத்தளத்தில் அல்லது நேரடியாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ''பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், 100/7 சுதந்திர மாவத்தை, கொழும்பு -07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# முகாமைத்துவ இளமாணி பட்டக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.09

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் முகாமைத்துவ இளமாணி பட்டக் கற்கை நெறிக்குரிய (Bechelor of managment studies) 2018/2019 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு துறையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 21.02.2018 இற்கு முன்னராக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலதிக விவரங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும்

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 63 ஆவது ஆண்டு விழாவும், சிவராத்திரி விழாவும் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் கழகத்தின் தலைவர் இரா. செல்வவடிவேல் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜானகி தர்மஜீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். வரவேற்புரையை நயினை சி.சோமேஸ்வரப்பிள்ளையும், ஆசியுரையை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ.ர.கேசவக்குருக்களும் வாழ்த்துரையை ஆலய தர்மபரிபாலன சபை தலைவர் செ.சுப்பிரமணியமும் வழங்குவர்.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற நீதிநூல் மனனப்போட்டி, கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து சிவராத்திரி நான்கு சாமப் பூசைகளாக இரவு 8 மணிக்கு முதலாம் சாம பூசையும், இரவு 11 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும், நள்ளிரவு 12 மணிக்கு இரண்டாம் சாம பூசையும், அதிகாலை 3 மணிக்கு மூன்றாம் சாமபூசையும், அதிகாலை 5 மணிக்கு நான்காம் சாம பூசையும் நடைபெறவுள்ளது. (இ)

# மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின்கட்டமைப்புமற்றும் பராம ரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை-

**கிளிநொச்சிப் பிரதேசத்தில்-**

சிலாவத்தை, உடுப்பிக் குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டன்கேணி, கொக்கிளாய், கடற்றொழில் கூட்டுறவுச்சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கம்பவாரிதி ஜெயராஜின் 90 இலக்கிய அனுபவப் பகிர்வு

# உன்னைச் சரணடைந்தேன்

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



## கோட்டத்தின் மேல் மாடி திறப்பு விழாவும், இசை நிகழ்ச்சிகளும்

### ஆதீனத்தில் எதிர்ப்புக் கூட்டம்

அடுத்த நாள் பத்திரிகையில் 'இனி நான் யாழ்ப்பாணத்தில் எங்கும் பேசப்போவதில்லை. ஒத்துக்கொண்ட பேச்சுக்கள் அத்தனையையும் இரத்துச் செய்கிறேன்' என விளம்பரம் கொடுத்தேன். எங்களது இந்த நகர்வை இயக்கம் எதிர்பார்க்கவில்லை. அவ் விளம்பரத்தால் யாழ்ப்பாணத்தில் பெரிய பரபரப்பு ஏற்பட்டது. என்ன நடந்தது என்று தெரியாமல் மக்கள் மனதில் பெருங் குழப்பம். ஒரு சிலர் கம்பன் கழகத்தைப் புலிகள், பேசக் கூடாதென தடை செய்து விட்டார்கள் என்று பேசிக் கொண்டார்கள். அப்போது யாழ்ப்பாணம் முழுவதிலும் உள்ள கோயில்களில் பெரும்பாலும் எனது சொற்பொழிவுகள் நடந்து வந்தன. திருவிழா உபயகாரர்கள் எனது நிகழ்ச்சிகளை, பத்திரிகைகளில் தினமும் விளம்பரம் செய்து வந்தார்கள். நான் பேசுவதில்லை என அறிவித்ததும், உபயகாரர்களுக்கு அதிர்ச்சி. நெல்லியடி தயாபரன் நான் முடிவை மாற்றி தொடர்ந்து பேச வேண்டும் எனக் கேட்டு பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளியிட்டான். அவ் விளம்பரத்தைப் பார்த்துப் பல கோயிற்காரர்களும் என்னைப் பேசச்சொல்லி வலியுறுத்தி தொடர்ந்து பத்திரிகையில் விளம்பரங்களைப் போடத் தொடங்கினர். எங்கள் கழக உறுப்பினன் கிருபானந்தா என்னைப் பேசச்செய்வதற்காய், பலரையும் சந்தித்து நல்லை ஆதீனத்தில் ஒரு கூட்டம் நடத்த ஒழுங்கு செய்தான். அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி, மாவை ஆதீனம் சண்முக நாதக்குருக்கள், நல்லை ஆதீனம், சிவராமலிங்கம் மாஸ்ரர் எனப் பல சமயப் பிரமுகர்களும் கிருபாவின் முயற்சியால் அக் கூட்டத்தில் பேச மனமுவந்து சம்மதித்தனர். அக் கூட்டம் நடக்கப் போகும் செய்தியும் பத்திரிகையில் வெளிவந்தது. அதனால் புலிகள் கடுமையாய் அதிருப்தியுற்றனர்.

★ ★ ★


### அம்மையாரின் மனமாற்றம்

இதற்கிடையில் இக் கூட்டத்தில் கலந்து கொண்டால் புலிகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிவரும் என அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியையும் சிலர் மிரட்டினராம். அச் செயலில் கழகத்திலிருந்த சிலருமே பங்கு பற்றியதாய் அறிந்து மனம் வருந்தினேன். இங்ஙனமாய் சிலர் குழப்ப, அம்மையாரும் குழம்பிப் போனார். முதல் தரம் கிருபானந்தா சென்ற போது உற்சாகமாக அப்படி ஒரு கூட்டம் நடத்தத்தான் வேண்டும் என்று சொன்னவர் இரண்டாம் தரம் அவன் சென்ற போது, அவனைக் கடுமையாய்த் திட்டி, கூட்டத்தில் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவித்து அனுப்பினார்.

★ ★ ★

## புலிகளின் நேரடித் தலையீடு

அக் கூட்டம் நடக்க இருந்த திகதியின் முதல் நாள் இரவு, உதயன் நிறுவுநர் சரவணபவனும், வித்தியாதரனும், எங்களை வரச் சொல்லிச் செய்தி அனுப்பினர். பதற்றத்தோடு நானும் ரத்தினகுமாரும் அங்கு சென்றோம். இரவு எட்டு மணியிருக்கும், அவ்விருவரும், ''புலிகள் இக் கூட்டம் நடத்துவது பற்றி, கடுமையாய் அதிருப்தியுற்றிருக்கின்றனர். இன்று மாலை பிரபாகரன் முக்கியமானவர்களோடு, இது பற்றி, ஒரு கூட்டம் நடத்துவதாய் செய்தி வந்திருக்கிறது. இந்தக் கூட்டத்தை நீங்கள் நடத்துவது நல்லதல்ல'' என்றனர். அப்போது நண்பர் சரவணபவன் எங்கள் மேல் அக்கறை கொண்டிருந்தார். அவர்கள் சொன்ன செய்தியால் உண்மையில் நாங்களும் சற்றுப் பயந்து போனோம். மறுநாள் நடக்க இருந்த கூட்டத்தை நிறுத்திவிடலாம் என முடிவு செய்து, அங்கிருந்தே கூட்டம் நிறுத்தப்பட்டதாய், ஒரு விளம்பரம் எழுதி நாம் கொடுக்க, சரவணபவன் ஒரு பையனிடம் அச் செய்தியைக் கொடுத்து, பத்திரிகை அலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைத்தார்.



போன பையன் ஒரு சில நிமிடங்கள் திரும்பி வந்து, அலுவலகத்திற்குப் புலிகள் வந்து, ஜெயராஜ் பேசுவது பற்றியோ? நடத்தப்பட இருக்கும் கூட்டம் பற்றியோ? இனி எந்தச் செய்தியும் வெளியிடக்கூடாது என உத்தரவிட்டுச் சென்றதும், அதனால் கூட்டம் நிறுத்தப்பட்ட செய்தியைக் கூட, இனிப் போட முடியாது என்றும், சொல்லிப் போனான். 'புலிகள் முதன்முதலாய், பத்திரிகை விடயத்தில் நேராய்த் தலையிட்டிருக்கின்றனர். இதைப் பெரிய பிரச்சினையாய்த் தலைவர் எடுத்திருக்கிறார் போல'' என்று, வித்தியாதரன் பதறப்பட்டான். அவனின் பதற்றம் எங்களை மேலும் பயப்படுத்தியது. கூட்டத்தை ரத்துச் செய்வதாய் முடிவு செய்து வீடு திரும்பினோம். கோட்டத்தில் நானும், ரத்தினகுமாரும் மட்டும் தான் இருந்தோம். இரவில் என்னை யாரும் கடத்த வருவார்களோ என, அஞ்சி நடுங்கியபடி அன்றிரவைக் கழித்தேன்.

★ ★ ★

### நிறுத்தப்பட்ட கூட்டம்

மறுநாள் காலை கழகப் பையன்கள் அனைவரும் வந்து விட்டனர். நிலைமையைச் சொல்லி கூட்டத்தை நிறுத்தும் முடிவை அறிவித்தோம். கிருபா சோர்ந்து போனான். சிவராமலிங்கம் மாஸ்ரர், 'அவங்களுக்கென்ன பயப்பிடுறது நாங்கள் கூட்டத்தை நடத்துவோம்' எனக் கொதித்தாராம்.

பின்னர் நிலைமையை உணர்ந்து அவரும் சம்மதிக்க, ஆதீன வாசலில் கூட்டம் நிறுத்தப்பட்டதாய் ஓர் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டது. புலிகளுக்குப் பயந்து, கூட்டத்திற்கு அதிகம் பேர் வரமாட்டார்கள் என நினைத்தோம். ஆனாலும், துணிந்து பலரும் அக் கூட்டத்திற்கு வந்ததாய், இளைஞர்கள் சொன்னார்கள், அக் கூட்டத்தைப் படம்பிடிக்கவென, புலிகளின் வீடியோக்காரர்களும் வந்து காத்திருந்தார்களாம். பின்னர் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டது என அறிந்து அவர்கள் நேராகச் சிவராமலிங்கம் மாஸ்ரரிடம் சென்று இக்கூட்டம் பற்றி அபிப்பிராயம் சொல்லும்படி கேட்டு வீடியோ பண்ணினார்களாம். மாஸ்ரர் இலக்கியப் பணியில் ஈடுபட்டிருக்கும் எங்களுக்கு ஆதரவு தருவதைவிட்டுவிட்டு இயக்கம் இடைஞ்சல் தருவது பற்றி துணிந்து கடுமையாகப் பதிலுரைத்தாராம். கூட்டம் ரத்தானதால், கூட்டத்திற்கு வந்தவர்கள் என்னைத் தேடி வருவார்கள் என ஊகித்து என்னை ஓர் அறையில் பூட்டிவைத்து விட்டுவந்தவர்களை எல்லாம் ஜெயராஜ் இங்கில்லை என, இளைஞர்கள் திருப்பி அனுப்பினர். இதனால் நான் கடத்தப்பட்டு விட்டேன் என யாழ் முழுவதும் செய்தி பரவியது.

★ ★ ★

### மாவை ஆதீனத்தின் ஆசி

இக் கூட்டம் நிறுத்தப்பட்ட அடுத்த நாள், ஓர் இரவு நேரத்தில் மாவை சண்முகநாதக் குருக்கள் அவர்கள், ஒரு தட்டு நிறைய வெற்றிலை, பழம், விபூதி எல்லாம் கொண்டு வந்து தந்து, 'உன்னுடைய முடிவு சரியானது நீவெல்வாய்' என என்னை ஆசீர்வதித்தார். துணிந்த அவரது செயல் கண்டு நெஞ்சுருகினேன்.

★ ★ ★

### யாழ்ப்பாணத்தில் நிறைவுப் பேச்சு

அப்போது எனது தாயின் ஊரான சண்டிலிப்பாயில் அமைந்த, ஐயனார் கோயில் திருவிழாவில் பத்து நாள்களாக, பாரதம் சொல்லிக் கொண்டிருந்தேன். கூட்டம் நடக்கவிருந்த அன்றிரவு எனது கடைசிச் சொற்பொழிவு. அன்றுடன்தான் நான் பேச்சை நிறுத்துவதாய் முடிவு செய்திருந்தேன். இவ்வளவு பிரச்சினைகளுக்கிடையிலும் அஞ்சாது, அன்றும் சொற்பொழிவுக்குக் காரில் தனியே சென்றேன். அங்கு பெரிய கூட்டம் கூடியிருந்தது. ஜெயராஜ் கடத்தப்பட்டுவிட்டார், வரமாட்டார் எனப் பலரும் பேசிக் கொண்டிருந்தனர். நான் சென்று இறங்கியதும், எல்லோர்க்கும் மகிழ்ச்சி. எனது பேச்சைப் பதிவு செய்ய, புலிகளின் புலனாய்வுத் துறையினர் அங்கங்கு ஒலிப்பதிவுக் கருவிகளுடன் நிற்பதாய், சிலர் வந்து சொல்லினர். நான் அதற்கு அஞ்சவில்லை. அன்றைக்கு 'பாஞ்சாலி சபதம்' என்பது தலைப்பு. இரட்டுற மொழிந்து எனது சபதத்தையும் அன்று வெளியிட்டேன். கூடியிருந்த மக்கள் சிலிர்த்துப் போயினர். அதன் பிறகு நீண்ட நாள்கள் நான் யாழ்ப்பாணத்தில் பேசவில்லை.

★ ★ ★

### திருவிழாக்கள் நின்று போயின

நான் பேச்சை நிறுத்திய ஒரு வாரத்திற்குள், ராணுவம் யாழைச் சுற்றி வளைத்து, எல்லைக் கிராமங்களுக்குள் நுழையத் தொடங்கிவிட்டது. அவ்வூர் மக்கள் அகதிகளாய் யாழ். நோக்கி வந்தனர். கோயில் திருவிழா நிகழ்ச்சிகள் எல்லாம் நிறுத்தப்பட்டன. என்மேல் அன்பு கொண்ட சிலர், 'பாருங்கோ அந்தாள் பேச்சை நிற்பாட்டினவுடன, திருவிழாக்கள் எல்லாம் நிண்டு போச்சு' என்று பகிரங்கமாய்ப் பேசத் தொடங்கினர். எனக்கும் இறைவன் என்னோடு இருப்பதான ஓர் உறுதி ஏற்பட்டது

★ ★ ★

### கல்லெறிபட்டோம்

இக்கால கட்டத்தில் மற்றொரு மனவேதனை தரும் சம்பவமும் நிகழ்ந்தது. மின்சாரம் இல்லாத காலம் அது. இயக்கத்தினர் ஜெனரேட்டர் வைத்து, தமது தேவைக்கு, 'கரண்டை' எடுத்து வந்தனர். தமக்கு மேலதிகமான 'கரண்டை' ஒரு சிலருக்கு அவர்கள் வழங்கினர். அவ்வளவு முரண்பாடுகளுக்கிடையிலும் எமது கம்பன் கோட்டத்திற்கும் ஆச்சரியமாய் அவர்கள் 'கரண்ட்' தந்திருந்தனர். இரவில் 'கரண்ட்' இருக்காது. அப்போது குமாரதாசனுக்குத் திருமணம் முடிந்திருந்தது. கம்பன் கோட்டத்தில் நானும், ரத்தினகுமாரும்தான் தங்குவோம். ஒரு நாள் இரவு திடீரென்று, 'சிலீர்' எனக் கண்ணாடி உடையும் சத்தம் கேட்டது. பயந்து ஓடிப்போய்ப் பார்த்தால், எங்களின் யன்னல் கண்ணாடிகள் ஓரிரண்டு உடைந்து கிடந்தன. இருட்டில் யாரோ ஓடுவது தெரிந்தது. இச் சம்பவம் அடுத்தடுத்த நாள்களிலும் தொடர்ந்து நடக்கத் தொடங்கியது. புதிதாய் கட்டிய கட்டடத்தின் கண்ணாடிகள் உடைவது கண்டு மிக வருந்தினேன். புலிகளின் 'பொலிஸில்' முறைப்பாடு செய்தேன். ஒருவரும் வந்து ஏனென்றும் கேட்கவில்லை. புலிகளின் 'பொலிஸ்' பகுதிக்குப் பொறுப்பாளராய் இருந்த நடேசனையும், அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனையும் நேரில் சந்திக்க முயற்சித்தேன். ஆனால், என்மேல் அன்பு கொண்டிருந்த அவர்கள் கூட, என்னைச் சந்திப்பதைத் தவிர்த்தனர். இத்தொல்லை சில காலம் தொடர்ந்தது.

★ ★ ★

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



★போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் ஆயுதங்களுடன் தயார் நிலையில்...
★சிறப்பு கொமாண்டோ படை வீரர்களும் தயார்.
★கொச்சி, விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படைப் பிரிவுகள் உஷார் நிலையில்...
★டெல்லியில் இருந்து தென்னிந்தியாவுக்கு சிறப்பு கொமாண்டோப் பிரிவு விரைவு.

# மாலைதீவுக்குள் பாய இந்தியா 'ரெடி'




மாலைதீவு அரசியலில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை கவனித்து வரும் இந்தியா தேவைப்படும் பட்சத்தில் மாலைத்தீவுக்கு செல்லும் வகையில் தனது கடற்படையையும், விமானப்படையையும் தயார் நிலையில் வைத்துள்ளது.

இந்தியாவின் அண்டை நாடுகளில் ஒன்றான மாலைதீவில் அரசியல் நெருக்கடியும், குழப்பமும் ஏற்பட்டுள்ளன.

கடந்த திங்களன்று திடீரென அந்த நாட்டு அதிபர் யாமீன் அப்துல் கயூம் அவசர நிலையை பிரகடனம் செய்தார். 15 நாள்களுக்கு இந்த அவசர நிலை அமுலில் இருக்கும் என்று அவர் அறிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்து வரும் அதிபர் யாமீன் அப்துல் கயூம், விரைவில் நடைபெற உள்ள தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியில் நீடிக்க வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளார். ஆனால் அவரது ஆசைக்கு தடைபோடும் வகையில் மாலைதீவு உயர் நீதிமன்ற நீதிபதிகள் சில அதிரடி உத்தரவுகளை வெளியிட்டனர்.

குறிப்பாக ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்த மாலைதீவு முன்னாள் அதிபர் முகமது நசீத்தை விடுதலை செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் ஆளும் கட்சியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டிருந்த 12 எம்.பி.க்களுக்கு மீண்டும் பதவி வழங்க நீதிபதிகள் உத்தரவிட்டனர். இது அதிபர் யாசின் அப்துல்கயூமுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது.

தற்போதைய சூழ்நிலையில் எதிர்க்கட்சிகள் நினைத்தால், தகுதி நீக்கம் செய்யப்பட்ட 12 எம்.பி.க்கள் ஆதரவுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து ஆட்சியைக் கவிழ்த்து விட முடியும். அத்தகைய நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தை முடக்கி அதிபர் யாமீன் உத்தரவிட்டார்.

மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) இரவு மாலைதீவு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அப்துல்லா சயீது அதிரடியாக கைது செய்யப்பட்டார். மேலும் 2 நீதிபதிகளும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். உயர் நீதிமன்றில் நீதிபதிகள் தனது ஆட்சியை கவிழ்க்க சதி செய் தனர் எனக் கூறி இந்த நடவடிக்கைகளை அதிபர் மேற்கொண்டார்.

நீதிபதிகள் கைது செய்யப்பட்டமைக்கு மாலைதீவு மக்களிடையே எதிர்ப்பு ஏற்பட்டது. தலைநகரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து கடந்த திங்கட்கிழமை காலை அதிபர் யாமீன் அப்துல் கயூம் மாலைதீவு முழுவதும் அவசர நிலையை பிரகடனம் செய்தார்.



15 நாள்களுக்கு இந்த அவசர நிலை அமுலில் இருக்கும் என்று அவர் அறிவித்துள்ளார். அதைத் தொடர்ந்து அனைத்து அரசு அலுவலகங்களையும் ராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. நீதிமன்றங்களும் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இதற்கிடையே மாலைதீவு அதிபர் யாமீன் அப்துல் கயூம் நேற்று புதிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டார். தனக்கு எதிராக உயர்நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவுகளை அவர் திரும்பப் பெறச் செய்தார்.

அதன்படி முன்னாள் அதிபர் முகமது நசீத் உள்பட 9 தலைவர்களை விடுதலை செய்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டுள்ளது. மேலும் 12 எம்.பி.க்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டது செல்லாது என்ற உத்தரவும் திரும்பப் பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் சட்டத்தையும் தனது காலடிக்குள் அதிபர் யாமீன் அப்துல் கயூம் கொண்டு வந்துள்ளார்.

மாலைதீவில் அதிபர் யாமீனின் செயற்பாடுகள் அத்துமீறி செல்வதால், உடனடியாக இந்தியா தலையிட வேண்டும் என்று அந்த நாட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்த நாட்டு மக்களில் சுமார் 40 சதவீதம் பேர், இந்தியா உடனே ராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று வலைத்தளங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் தற்போது இலங்கையில் தஞ்சம் புகுந்துள்ள மாலைதீவு முன்னாள் அதிபர் முகம்மது நசீத்தும் இந்தியாவின் உதவியை நாடியுள்ளார். அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், மாலைதீவில் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் தலைவர்களையும், உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் விடுவிக்க இந்தியா, தனது ராணுவத்தை அனுப்ப வேண்டும். அதோடு தூதர்களையும் அனுப்பி யாமீனுடன் பேச்சு நடத்தி அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே மாலைதீவு அரசியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை இந்தியா உன்னிப்பாக கவனித்துவருகிறது. இந்தியாவில் இருந்து மாலைதீவு சுமார் 750 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. தேவைப்படும் பட்சத்தில் சுமார் ஒரு மணி நேரத்துக்குள் மாலைதீவுக்குச் செல்லும் வகையில் இந்தியா தனது கடற்படையையும், விமானப்படையையும் தயார் நிலையில் வைத்துள்ளது.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் பல்வேறு இடங்களில் இந்தியக் கடற்படைப் போர்க் கப்பல்கள் முகாமிட்டுள்ளன. மேற்குப் பிராந்திய கடல் பகுதியில் எப்போதும் இந்தியக் கடற்படையின் 2 கப்பல் பிரிவு போர்க் கப்பல்கள் ரோந்துப் பணியில் இருக்கும்.

## இராணுவத் தளபதியின் உத்தரவு கிடைத்தால் 2 ஆவது நிமிடம் போர் விமானங்கள் சீறிப் பறக்கும்

தேவைக்கு ஏற்ப அந்தப் போர் கப்பல்களை மாலைதீவுக்கு ஒரு மணி நேரத்துக்குள் திருப்பி விட முடியும். அதற்கு ஏற்ப தயாராக இருக்கும்படி அந்தப் போர்க் கப்பல் பிரிவு உஷார்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய விமானப் படைக்கு சொந்தமான சி 30 ஜெ சூப்பர் ஹெர்குலஸ், சி17 குளோப்மாஸ்டர் ரக விமானங்களும் மாலைதீவுக்குப் பாய தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் போர் விமானங்கள் மூலம் ஒரே நேரத்தில் அதிக எடையுள்ள போர் ஆயுத தளபாடங்களையும் அதிக வீரர்களையும் கொண்டு செல்ல முடியும்.



இதில் சி.17 ரக போர் விமானம் 70 டன் எடையுள்ள போர்க் கருவிகளை ஒரே மூச்சில் 4200 கி.மீ. தூரத்துக்குக் கூட எடுத்துச் செல்லும் ஆற்றல் கொண்டது. இந்த ரக விமானங்களில் ஆயுதங்கள் ஏற்றப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ராணுவத் தளபதியிடம் இருந்து உத்தரவு வந்த அடுத்த 2 ஆவது நிமிடம் மாலைதீவுக்கு புறப்படும் வகையில் இந்த ரக விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர இராணுவத்தின் சிறப்பு கமாண்டோ படை வீரர்களும் மாலைதீவுக்குச் செல்லத் தயார்படுத்தப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் ராணுவ கொமாண்டோ படைப் பிரிவு ஒன்று டில்லியில் இருந்து தென்னிந்தியப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் இந்தக் கொமாண்டோ படை வீரர்களும் களத்தில் குதிப்பார்கள்.



கொச்சி, விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படைப் பிரிவுகள் முழு அளவில் உஷாராக வைக்கப்பட்டுள்ளன. ராடார் கருவிகள் கொண்ட விமானப் படையும் தயார்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் போர்க் கப்பல்களும், விமானப்படைகளும் முழு அளவில் தயார் நிலையில் உள்ளமையால் மாலைதீவுப் பிரச்சினையில் இந்தியா உடனே அதிரடியாக தலையிடுமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ஆனால் மத்திய அரசு உயர் அதிகாரிகள் யாரும் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

மாலைதீவு விவகாரத்தில் மற்ற எந்த நாடுகளும் தலையிடக்கூடாது என்று சீனா வலியுறுத்தியுள்ளது. அதாவது தற்போதைய அதிபர் யாமீன் அப்துல் கயூமுக்கு ஆதரவாக சீனா செயல்படத் தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் மாலைதீவு குழப்பம் அடையும் பட்சத்தில் இந்தியா தலையிடுமா அல்லது மௌனமாக இருந்துவிடுமா என்பதில் மாறுபட்ட தகவல்கள் வெளியானபடி உள்ளன. மாலைதீவில் உச்சக் கட்ட குழப்பம் வரும் நிலையில்தான் இந்தியா தனது அதிரடியைக் காட்டும் என்று கூறப்படுகிறது.

இதே வேளை மாலைத்தீவு அதிபர் யாமீன், சீனாவின் ஆதரவாளாக உள்ளார். சீன போர் கப்பல்கள் மாலைதீவில் நிற்க கடந்த ஆண்டு அவர் அனுமதி வழங்கினார்.

இதனால் தற்போதைய மாலைதீவு பிரச்சினையில் இந்தியா சற்று பொறுமையைக் கையாள்கிறது. தற்போதைக்கு இந்தியா தனது ராணுவத்தை முழு அளவில் தயார்படுத்திக் கொண்டு மாலைதீவு விவகாரங்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“மாலைதீவில் கி.மு. 200 ஆம் ஆண்டிலேயே மக்கள் வசித்தமைக் கான தடயங்கள் உள்ளன. கி.மு. 2000 ஆம் ஆண்டுக்கு முன்பில் இருந்தே இங்கு மக்கள் வசித்து இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.”

# தமிழர்கள் ஆண்ட மாலைதீவில் இன்று அரசியல் **பூகம்பம்!**

இந்தியாவுக்குத்தெற்கே இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள மாலைதீவு இன்று அரசியல் சுழலில் சிக்கித் தவிக்கிறது.

மாலைதீவு தனி நாடாக இருந்தாலும் இந்திய கலாசாரத்தோடு ஒன்றிணைந்த பகுதி ஆகும். குறிப்பாக, தமிழ் மற்றும் மலையாள கலாசாரம் கொண்ட நாடாக மாலைதீவு திகழ்கிறது. அங்கு மலையாளம் முக்கிய மொழியாகவும் இருக்கிறது.

மாலைதீவு மொத்தம் 26 தீவுக் கூட்டத்தைக் கொண்டது. அதில், சுமார் 1192 குட்டித் தீவுகள் இருக்கின்றன. இந்தத்தீவுக் கூட்டங்கள் மாலை போன்ற வடிவத்தில் அமைந்துள்ளன. எனவே, அது மாலைதீவு என அழைக்கப்பட்டு வருகிறது. இத்தனை தீவுகள் இருந்தாலும் 200 தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கிறார்கள்.

மாலைதீவின் மொத்த மக்கள் தொகை 4 லட்சத்து 27 ஆயிரத்து 756. இதன் தலைநகரமாக மாலி உள்ளது. இது, 5.8 சதுர கி.மீற்றர் பரப்பளவு கொண்டது. இங்கு ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 412 பேர் வசிக்கிறார்கள். உலகிலேயே மக்கள் அடர்த்தியாக வாழும் நகரங்களில் ஒன்றாகவும் மாலி நகரம் உள்ளது.



மாலைதீவில் கி.மு. 200 ஆம் ஆண்டிலேயே மக்கள் வசித்தமைக் கான தடயங்கள் உள்ளன. கி.மு. 2000 ஆம் ஆண்டுக்கு முன்பில் இருந்தே இங்கு மக்கள் வசித்து இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. ஆரம்பத்தில் கேரளா, தமிழகத்தைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் இந்த தீவுக்குச் சென்று குடியேறி இருக்கிறார்கள்.

பின்னர், இலங்கை, மலேசியா மற்றும் அரபு நாடுகளில் இருந்தும் மக்கள் இங்கு வந்து குடியேறி இருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் திருமணம் செய்து அதன் மூலம் கலப்பின சந்ததியினரும் உருவாகி உள்ளனர்.

**சிங்களவரும் ஆட்சி**

ஆரம்பத்தில் கிராவரு என்ற தமிழர்கள் அங்கு ஆட்சி செலுத்தி இருக்கிறார்கள். பின்னர் சோழர் காலத்தில் அவர்கள் ஆட்சியின் கீழ் நீண்ட காலமாக மாலைதீவு இருந்துள்ளது. இதன் பிறகு சிங்களவர்கள் மாலைதீவை கைப்பற்றி ஆட்சி செய்துள்ளனர். சிங்கள இளவரசன் கொயிமலா நீண்ட காலமாக ஆட்சி செய்துள்ளான். அப்போதெல்லாம் அங்கு புத்த மதம் தழைத்தோங்கி இருந்துள்ளது.

இடையில் 1153 ம் ஆண்டு அங்குள்ள மக்கள் அனைவரும் முஸ்லிம்களாக மாறிவிட்டனர். அதைத்தொடர்ந்து சுல்தான் ஆட்சி முறை வந்தது. 1558 இல் போர்த்துக்கேயர்கள் மாலைதீவைக் கைப்பற்றிக் கொண்டனர். 1654 இல் டச்சுக்காரர்கள் கைப்பற்றினார்கள்.

**சுல்தான் ஆட்சி முறை**

1887 இல் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் மாலைதீவு வந்தது. 1965 இல் மாலைதீவுக்குச்சுதந்திரம்அளிக்கப்பட்டது. அதன்பிறகு மீண்டும் சுல்தான் ஆட்சி முறை வந்து 1968 ஆம் ஆண்டுவரை நீடித்தது.

பின்னர், மாலைதீவு குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. முதல் அதிபராக இப்ராகிம் நசீர் தேர்வு செய்யப்பட்டார். 1978 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அப்துல் கயூம் அதிபராகத் தேர்வு செய்யப்பட்டு 30 ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இருந்தார்.

அதன் பிறகு முகமது நசீத், முகமது



வாகித் உசேன், அப்துல்லா யாமீன் ஆகியோர் அதிபர்களாகப் பதவி ஏற்றனர். தற்போது அப்துல்லா யாமீன் அதிபராக இருக்கிறார். இந்த நாட்டின் முக்கிய தொழிலாக மீன்பிடித் தொழில் உள்ளது. மீனைப் பதப்படுத்தி பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பி சம்பாதித்து வருகின்றனர்.

**மாலைதீவில் அதிகாரபூர்வ மொழியாக திவெயி**

மேலும், உலகின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகவும் மாலைதீவு திகழ்கிறது. சுற்றுலாவின் மூலம் ஏராளமான வருமானம் கிடைக்கிறது. மாலைதீவின் அதிகாரபூர்வ மொழியாக திவெயி மொழி உள்ளது. இது சிங்கள மொழியை ஒட்டியே அமைந்துள்ளது.

1988 இல் இலங்கை தமிழ் போராளி குழு ஒன்று மாலைதீவைக் கைப்பற்றிக் கொண்டது. அப்போது, இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி இந்திய ராணுவத்தை அனுப்பி சில மணி நேரங்களில் மாலைதீவை மீட்டுக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவுக்கும் ஒரு கண்! விழிப்புடன் இந்தியா!!

மாலைதீவில் விஸ்வரூபம் எடுத்துள்ள அரசியல் குழப்பத்துக்கு இடையில் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அந்நாட்டில் கால்பதிக்க சீனா முயற்சித்து வருகிறது எனக் கூறப்படுகிறது.

மாலைதீவு இந்தியாவிற்கு நேர் தெற்காக இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளதால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு முக்கிய அரணாக இருக்கிறது.

இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு



நாடாகவும் மாலைதீவு இருப்பதால் இந்தியா மாலைதீவைதனது குழந்தை போலவே பாவித்து வருகிறது.

இந்தியாவின் பரம எதிரியான சீனா, இந்தியாவின் நட்பு நாடுகள் அனைத்தையும் தன்பக்கம் இழுப்பதற்கு தொடர்ந்து முயற்சித்து வருகிறது. அதன்படி, இலங்கை, பூட்டான், நேபாளம் போன்ற நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதற்கு முயற்சித்து வருகிறது.

இதேபோல, மாலைதீவிலும் தலையிட்டு தன்பக்கம் அந்த நாட்டை இழுக்க வேண்டும் என்ற திட்டம் சீனாவுக்கு உள்ளது. இதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது. மாலைதீவு மட்டும் சீனாவின் பக்கம் சாய்ந்துவிட்டால் அங்கு சீன ராணுவ முகாம்களை அமைத்துவிடும். அப்படி முகாம்கள் அமைந்தால் அது இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

தற்போது அங்கு ஏற்பட்டுள்ள அரசியல்குழப்பம்சீனாஆதிக்கத்துக்கு சாதகமாக அமைந்து விடக்கூடாது என்பதில் இந்தியா மிகக் கவனமாகச் செயற்பட்டு வருகிறது.

# இலகு ரயில் சேவை இலங்கையில் அறிமுகம்!

கொழும்பு, பெப். 09

உலகின் பல வளர்ச்சியடைந்த நாடுகளில் பயணிகளின் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் இலகு ரயில் சேவை இலங்கையிலும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

அதற்கான ஆரம்ப கண்காணிப்பு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் எதிர்வரும் ஜூலை மாதம் வரையில் அதன் முக்கிய பணிகள் நிறைவடையும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்த வருட நடுப் பகுதியில் புதிய ரயில் சேவைத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் குறிப்பிடடுள்ளார்.

இந்த ரயில் கட்டமைப்பு தற்போதைய திட்டமிடலுக்கமைய 6 வீதி கட்டமைப்புகளில் நிர்மாணிக்கப்படவுள்ளது. அதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக மாலபேயில் இருந்து பொரளை வரை ரயில் வீதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்திற்கு 1.3 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி கிடைக்கவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் மாலபேயில் இருந்து கொழும்பு கோட்டைக்கு 40 நிமிடங்களில் பயணிக்க முடியும்.

அதற்கமைய 2021ஆம் ஆண்டு வரையில் இந்த திட்டம் நிறைவடையவுள்ளது. இன்னும் 3 வருடங்களில்



மின்சார ரயிலில் பயணிக்கும் சந்தர்ப்பம் இலங்கை மக்களுக்கும் கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# சிங்களவர் கோட்டையில் தமிழனுக்காக கர்ஜித்த சிங்கம் ஜீ.ஜீ!

**அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் நாற்பத்தோராவது சிராத்ததினம் (2018.02.07) இன்றாகும்.**

**தொகுப்பு - டி.ராஜா**

அமரர் ஜீ.ஜீ.அவர்களைப் பற்றி அரசியல் வரலாறு சட்ட வரலாறு பற்றி ஏற்கனவே பல நினைவுரைகள் வெளி வந்திருக்கின்றன.

அந்தவகையில் அவர் செய்த சேவை வெளிவராமல் இருக்கும், ஒரு சிலவற்றை இன்றைய சிரார்த்த தினத்தில் வெளிப்படுத்துவது எமது கடமையாகும். இந்த வருடத்தில் ஆனைக்கோட்டை எஸ்.எஸ். தியாகராஜா அவர்கள் (89 ஆவது வயதில்) எழுதிய உலக மாமேதை ஜி.ஜி என்ற நூலில் இருந்து சிலவற்றை வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

**பொல்லாத பொன்னம்பலம் கல்கி**

அஞ்சாத மாவீரன், குத்துச்சண்டையின் வீரன்.

அரசாங்க சபை நடந்து கொண்டிருக்கிறது. கேணல்ஜே.எல்.கொத்தலாவை (பிற்கால இலங்கைப் பிரதமர்) வீற்றிருக்கிறார். அதே மண்டபத்தில் தமிழரின் முடிசூடா மன்னன் ஜீ.ஜீ.பொன்னம்பலம் வீற்றிருக்கிறார்.

ஜீ.ஜீ.சிங்களவர் செய்யும் அட்டூழியங்களை அக்குவேறு ஆணிவேறாக எடுத்து சிம்மகர்ச்சனை பொழிகின்றார். இந்திய மக்களுக்குச் செய்யும் அட்டூழியத்தை அவரால் பொறுக்க முடியவில்லை. இலங்கை இந்தியர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் தலைவர் இவர். தமிழர்களின் உரிமைகளைத் தாங்கி கர்ச்சிக்கின்றார்.

இதனைக் கண்டு பொறுக்காத கொத்தலாவல ஜீ.ஜீயைப் போருக்கு அழைக்கின்றார். கொத்தலாவல என்றால் சிங்களவர், தமிழருக்கு ஒரு பயம். கடற்படைத் தளபதி, பணம் படைத்தவர் என்றெல்லாம் ஒதுங்கிக் கொள்வார்கள். அடித்தாலும் வாங்குவதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். எல்லோரும் அவர் முன் வாய் மூடி மௌனியாகத் தான் காட்சியளிப்பார்கள். அத்தனை பயம்.

ஆனால், இலங்கையின் முடிசூடா மன்னன் விடுவாரா? கேணல் கொத்தலாவலயின் அழைப்பை ஏற்று நெஞ்சுரத்தோடு நேருக்குநேர் மோதிக் கொள்ளப் புறப்பட்டார் ஜீ.ஜீ.

அரசாங்க சபையில் உள்ளவர்கள் அதிர்ச்சியுற்றனர். இருவருக்கும் இடையில் மற்போர் நடந்தது. கண்டோர் அஞ்சும் விதத்தில் ஜீ.ஜீ. பதில் கொடுத்தார். கேணலும் ஜீ.ஜீயும் வெம்போர் புரிந்த பொழுது அங்கத்தவர்கள் எல்லோரும் ஏக்கமுற்றனர். வலிமையின் வரம்பு கண்ட ஜீ.ஜீ. தன் வயிரக்கரத்தால் கேணலின் அகன்ற மார்பில் குத்தினார். குத்துக்கு ஆற்றாத கேணல் சண்ட மாருதத்தில் அகப்பட்ட மரம்போல் விழுந்தார். இருவரும் நிலத்தில் கிடந்து புரண்டார்கள். எல்லோரும் ஏங்கினர். வெற்றிவாகை சூடினான் மாவீரன் பொன்னம்பலம். அன்றுமுதல் சிங்களவர் அஞ்சும் ஒப்புயர்வற்ற தமிழ்த் தலைவராக விளங்கினார் ஜீ.ஜீ.

1938ஆம் ஆண்டு ஆனந்தவிகடன் வார இதழிலே பத்திரிகை உலகில் மிக உயர்ந்த பதவியை வகித்திருந்த பேராசிரியர் கல்கி அவர்கள் பொல்லாத பொன்னம்பலம் என்ற தலைப்பின்கீழ் பின்வருமாறு எழுதியிருந்தார்.

அரசசபை அங்கத்தவர் ஸ்ரீ பொன்னம்பலம் என் மனக்கண்ணின் முன்பு வருகிறார். வரும்போதே தேசிய வாதமாவது மண்ணாங் கட்டியாவது. நம்மை அடியோடு தொலைத்துவிடப் பார்க்கிறவர்களுக்கு முன் தேசியவாதமா? என்று சண்டை பிடித்துக் கொண்டு வருகிறார். அரசாங்க சபையில் இவருக்கும் ஒரு சிங்களவருக்கும் நடந்த குஸ்திச் சண்டையைப் பற்றி முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். இவர் முகத் தோற்றத்தைப் பார்த்தாலும் பெரிய சண்டைக்காரர் என்றே தோன்றும். சண்டையிலும் கூடப் பிடிவாதத்துடனும் உறுதியுடனும் சண்டை போடுகிறவர்.

இவர் சேர்.ஜோனுடன் சண்டை பிடித்த பொழுதும் சிங்களவருக்குப் பயந்து யாழ்ப்பாணம் ஓடி வந்தாரா? இல்லை. கொழும்பு மாநகரில் தான் சீவித்தார். அந்த மாவீரனை எவரும் எதிர்க்கவில்லை. அவருடைய உயிரை யாரும் குடிக்கவில்லை. ஒருமுறை சட்டசபைக் கன்னீனில் பிலிப் குணவர்த்தனா ஜீ.ஜீக்கு ஏதோ சுடச் சொல்லிவிட்டார். பிலிப் குணவர்த்தனா என்றால் சிங்களவர்.

அவரைச் சிங்கம் என்று அழைப்பார்கள். அப்படிப்பட்ட குணவர்த்தனாவுக்கு முகத்தில் ஒரு குத்துப் போட்டார். பிலிப் நிலை தடுமாறினார். இவ்விதம் தொழிற்கட்சித் தலைவர் ஏ.ஈ.குணசிங்க ஆகியோரையும் அடக்கினார். பொன்னம்பலமென்றால் சிங்களவர்கள் அஞ்சுவார்கள். அவருடைய வீரத்தால் தான் இன்றும் தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழ்கிறார்கள் என்றால் மிகையாகாது.

**மாபெரும் அறிஞன்**

சூசைநுனிபோலும் கூரிய புத்தி – சுவாமி லெகொக்

அறிவின் மின்விசைக் கருவி ஜீ.ஜீ. – ஆஸ்திரேலியச் செய்தித்தாள்

ஜீ.ஜீ.பொன்னம்பலம் மருத்துவத் துறையில் மன்னனாக, விஞ்ஞானத் துறையில் வித்தகனாக, உலகில் தலைசிறந்த பாரிஸ்டராக, மேதா விலாசம் பொருந்திய அரசியல் ஞானியாகத் திகழ்ந்தார்.

கொழும்பில் படிக்கும் பொழுதே சூசைநுனிபோலும் கூரிய புத்தி படைத்தவர் எனக் காலஞ்சென்ற சுவாமி லெலொக் கூறியுள்ளார். ஆஸ்திரேலிய செய்தித்தாளொன்று அறிவின் மின்விசைக் கருவி ஒன்று கூறியுள்ளது.

பொன்னம்பலம் அவர்கள் ஒரு மாபெரும் டாக்டராகியிருக்கலாம். அவர் வழக்குகளில் பெரிய பெரிய டாக்டர்களைக் கேட்கும் கேள்விகளைக் கண்டால் அதன் உண்மை விளங்கும்.

பத்மினி குலரத்ன கொலை வழக்கு பிரதம நீதியரசர் எச்.என்.ஜி. பெர்னாந்தோ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜீ.ஜீயின் குறுக்கு விசாரணையைப் பார்ப்பதற்கு நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் மக்கள் கூட்டம் திரண்டிருந்தது.

டாக்டர் குலரத்னாவின் சிரேஷ்ட வழக்கறிஞர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அரசாங்க உதவி இரசாயன பரிசோதகர் சற்குணானந்தனை பொன்னம்பலம் மருத்துவ சம்பந்தமான பல கேள்விகள் கேட்டு, குறுக்கு விசாரணை செய்தார். இந்த மரணம் என்ன வகை ஆர்ஸெனிக் வித்தினால் ஏற்பட்டது? என்று நீதியரசர் வினவினார். சற்குணானந்தன் சோடியம் ஆர்ஸெனிக் விஷம் என்றார்.

இவ்வேளையில் இந்தக் குடல் பரிசோதனைகளில் புள்ளி விவரம் சம்பந்தமாக சிரேஷ்ட வழக்கறிஞர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் சாட்சியைப் பல கேள்விகள் கேட்டார்.

நீதியரசர் ஏச்.என்.ஜி.பெர்னாந்தோ, ஜீ.ஜீயைப் பார்த்து நீர் இந்த மருத்துவ ரீதியான புள்ளிவிவரக் கணக்குகளை எப்படிக் கற்றுக் கொண்டீர்? என்று ஆச்சரியத்துடன் கேட்டார். இதுமட்டுமல்ல ஒரு கொலை வழக்கில் அரசாங்க டாக்டர் குமாரசாமி முன்னுக்குப்பின் முரண்பாடாகச் சாட்சியமளித்ததால், அவரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கில் ஜீ.ஜீ. ஆஜராகி மருத்துவ சம்பந்தமாக வாதாடி, வெற்றிபெற்றுக் கொடுத்தார். மருத்துவத்துறையில் இத்தனை புகழ் பெற்றவர் ஜீ.ஜீ.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஒரு சிறந்த விஞ்ஞான மேதையாக இருக்கலாம். அவர் அத்துறையில் இறங்கியிருந்தால் நிச்சயம் உலகம் போற்றும் விஞ்ஞான மேதையாய் இருந்திருப்பார் என்பதை அவருடன் ஒருநாள் உரையாடி உறவாடினாலும் உணரலாம்.

காலஞ்சென்ற கல்கி ஆசிரியர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஸ்ரீ பொன்னம்பலம் சிறந்த அறிவுக்கூர்மையுடையவர் என்பது சிறிது நேரம் அவரிடம் பேசிக் கொண்டிருந்தாலே தெரிந்துவிடும். அத்தோடு திறமையும் உள்ளவர். நல்ல படிப்பாளியும் கூட பஞ்சாப்பில் ஜனத்தொகை எவ்வளவு? அதில் முஸ்லிம்கள், ஹிந்துக்கள், சீக்கியர்கள் எத்தனைபேர்? பஞ்சாப் சட்டசபையில் இவர்களுக்கெல்லாம் எத்தனை எத்தனை ஸ்தானங்கள்? என்று இந்த நிமிடம் உங்களைக் கேட்டால் என்ன செய்வீர்கள்? விழிப்பீர்கள். அவ்வளவுதான் ஸ்ரீ பொன்னம்பலத்திற்கு இதெல்லாம் மனப்பாடம். இவ்வளவு அறிவாற்றல் உள்ளவர். அரசியல் போரில் சிறிது பொறுமை மட்டும் அறிவாற்றல் உள்ளவர். அரசியல் போரில் சிறிது பொறுமை மட்டும் கைகொண்டிருப்பாரேயானால் மிகவும் உயர்ந்த பதவியை அடைந்திருப்பார் என்பது மட்டுமன்றி இன்னும் பல விடயங்களையும் சாதித்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.



மேலே குறிப்பிட்டுள்ளது 1938 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதியன்று வெளிவந்த ஆனந்தவிகடனில் தெரிவித்துள்ளார்.

**ஜீ.ஜீக்குத் தெரிந்த மொழிகள்**

ஜீ.ஜீக்கு ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ், ஜேர்மன், தமிழ், சிங்களம் ஆகிய பல மொழிகள் தெரியும்.

நீக்ரோக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டவர் லிங்கன்,

இந்திய வம்சாவளி மக்களுக்காகப் பாடுபட்டவர் ஜீ.ஜீ.

அடிமைகளாக இருந்துவந்த நீக்ரோக்களை அமெரிக்கர்களின் கொடுமையிலிருந்து விடுவிக்கும் மாபெரும் பொறுப்பு ஆபிரகாம்லிங்கனுக்கு வாய்த்தது. அதன்படி 1863ஆம் ஆண்டு இலட்சக்கணக்கான நீக்ரோக்களுக்கு விடுதலை அளிப்பதாகக் கூறினார். இதனைக்கண்டு அவர் மேல் வெறுப்புக்கொண்ட ஒருவன் ஒருநாள் லிங்கன் அமைதியாக இருந்து நாடகம் பார்த்துக் கொண்டிருந்த போது திடீரென்று அவரைச் சுட்டுவிட்டான்.

இந்தியாவிருந்து இலங்கைக்கு வேலைக்கு வந்தவர்களைத் தோட்ட முதலாளிமார் கொடுமைப்படுத்தியபோது அமரர் ஜீ.ஜீ. மனம்பொறுக்காது தோட்ட முதலாளிமார்களை எதிர்க்கத் தொடங்கினார்.

இப்படிப்பட்ட தொழிலாள மக்களுக்காகப் போராடினார் ஜீ.ஜீ. இத்தனை கேவலப்பட்டு கஷ்டப்படும் மக்களைக் கண்டு மனம் சிதைந்தார். கண்ணீர் உருத்தினார். தமிழன் எங்கு வாழ்ந்தாலும் தமிழன்தான் என்ற எண்ணம் அவர் மனதில் திடமாகப் பதிந்திருந்தது. இத்தனை கஷ்டப்பட்ட இந்தியர்களை சிங்கள மக்கள் வருத்தத் தொடங்கினர். இதனைக் கண்டு மனம் பொறுக்காது அவர்களை எதிர்க்கத் தொடங்கினார். மலைநாடு எங்கும் சென்று, எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தினார். அவரொரு கூட்டத்தில் பேசும் பொழுது நாள் அன்றும் இந்தியன் இன்றும் இந்தியன் என்றார். அவருடைய உண்மையான சகோதர பாசம் அதிலிருந்து வெளிப்படுகின்றது.

இலங்கை இந்தியர்கள் வகுப்பு வாதக் கட்சியின் தலைவர் இவர். ஏன் ஐயா! நீர் வகுப்பு வாதியாக என்று கேட்டால் ஆம்! நான் வகுப்புவாதிதான் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லுவார். சிங்கள அரசியல்வாதிகளின் அநீதி அவரை இப்படிச் சொல்ல விட்டிருக்கின்றது. ஒருவன் மாமிசம்தான் சாப்பிடுகிறான் என்றால் எலும்பைக் கோத்து கழுத்தைச் சுற்றிப் போட்டுக்கொள்ள வேண்டுமா? என்ற பழமொழி உண்டு.

அம்மாதிரி ஒருவர் வகுப்புவாதியாக இருந்தாலும் அதை இவ்வளவு வெளிச்சமாக சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் உண்மையில் ஸ்ரீ பொன்னம்பலத்தையாவது அல்லது இலங்கையில் இந்தியர் உரிமைகளுக்காகப் போராடும் மற்றவர்களையாவது வகுப்புவாதிகள் என்று சொல்வது அபத்தம் என்றே நான் கருதுகின்றேன். நிஜமாக வகுப்புவாதத்தை அனுஷ்டிக்கிறவர்கள் சிங்கள மந்திரிகள். அவர்களுடைய வகுப்புவாதத்தின் கொடுமையிலிருந்தும் அநீதிகளிலிருந்தும் இந்தியர்களைக் காப்பாற்றுவதற்காகவே ஸ்ரீ பொன்னம்பலம் போன்றவர்கள் போராடுகிறார்கள். அந்தப் போராட்டத்தின் போது உண்டாகும் கோபம் காரணமாகவே அவர்கள் தங்களுக்குத் தாங்களே வகுப்புவாதிகள் என்ற பட்டம் சூட்டிக்கொள்கிறார்கள்.

தோட்டத் தொழிலாளிகளின் உரிமைகளுக்காக ஜீ.ஜீ. இடையறாது போராடினார். இம்மக்களுக்காக தன் உயிரைக் கூட துச்சமாக மதித்தார். மறத்தமிழ் வீரனான ஜீ.ஜீ.அச்சம் என்பதை கனவிலும் அறியாதவர். கண்டி மைதானத்திலே ஜீ.ஜீ. பேசுவதற்கென ஒரு மாபெரும் கூட்டத்தை மலைநாட்டுத் தமிழர்கள் ஒழுங்குசெய்திருந்தார்கள். கூட்டத்திற்கு இரண்டொரு நாள்களுக்கு முன் கூட்டத்தைக் குழப்ப சில சிங்களக் காடையர்கள் முயன்று வருகின்றனர் எனச் செய்திகள் கொழும்புக்கு வந்தன.


இதைக் கேள்வியுற்ற திவான் பகதூர் ஐ.எக்ஸ்.பேரேரா ஜீ. ஆர். மேத்தா போன்றோர்கள் ஜீ.ஜீயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என எண்ணி ஜீ.ஜீயை கூட்டத்திற்குப் போகவிடாது தடுத்தனர். பதிலாகத் தாம் செல்வதாக முடிவுசெய்தனர். ஜீ.ஜீ. மௌனம் சாதித்தார். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று எண்ணினார்கள். தடை கூறியவர்கள். குறிப்பிட்ட நாளில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஜீ.ஜீ. தன்னந்தனியனாக அங்கு வந்து சிங்கம்போல் மேடையில் ஏறினார். மேடையிலே இருந்த எல்லோரும் திகைத்தனர். மக்கள் ஒரே ஆரவாரம் செய்தனர்.

மக்கள் அன்புக்குக் கட்டுப்பட்டவன் நான் குண்டர்களுடைய குண்டுக்கு அஞ்சியவன் நானல்லன் என்று கூறி குண்டர்களைத் தனக்கே உரிய பாணியில் அடக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


06. 

1 2 3




07. 

1 2 3



உருக்களில் உள்ள இலக்கங்களைஅவதானித்துவிடைஎழுதுக.




08. வட்டத்திற்குமாத்திரம் உரிய இலக்கம் எது?

1. 6 2. 2 3. 4

09. செவ்வகம்,முக்கோணிஆகிய இரண்டுக்கும் மாத்திரம் உரிய இலக்கம் எது?

1. 2 2. 6 3. 5


10. செவ்வகம்,முக்கோணி,வட்டம் ஆகிய மூன்றுக்கும் உரிய இலக்கம் எது?

1. 3 2. 8 3. 5

வெற்றிடத்திற்குப் பொருத்தமானவிடையைத் தெரிவுசெய்துஅதன் கீழ்க் கோடிடுக

11. தை,பங்குனி,வைகாசி ......................... ஆடி

1. ஆவணி 2. ஆனி 3.சித்திரை



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 11

தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி II நேரம்- 1 மணி 15 நிமிடம்

## வினாத்தாள் 11 பகுதி- II இன் தொடர்ச்சி...

26. சிக்குன் குன்யா நோய் பரவுவது

1. வீட்டுஈயினால் 2. நுளம்பினால் 3. நாயினால் 4. குரங்கினால்

27. செய்திகளை கொண்டு செல்ல உதவிய பறவை

1. பருந்து 2. கொக்கு 3. புறா 4.மயில்

28. தனியாகப் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்று

1. புத்தகம் 2. பென்சில் 3. பற்பசை 4. பற்தூரிகை

29. இலங்கையின் உயரமான மலையாக விளங்குவது

1. பேதுறுதாலகாலமலை 2. நக்கிள்ஸ் 3. நமுனுகுல 4. சிவனொளிபாதமலை

30. தேசியக் கொடியில் உள்ள பச்சைநிறம் குறிப்பது

1. முஸ்லீம் 2. தமிழர் 3. பறங்கியர் 4. சிங்களவர்

31. இரவில் மலரும் பூ

1. செம்பருத்தி 2. கடுபுல் 3. மல்லிகை 4. நித்தியகல்யாணி

32. அதிகளவுவித்துக்களைக் கொண்டபழம்

1. மா 2. ஆனைக்கொய்யா 3. பப்பாசி 4. மங்குஸ்தான்

33. பின்வருவனவற்றுள் மிகச்சிறியவித்து

1. கடுகு 2. பலா 3. மா 4. பாசிப்பயறு

34. தாவர இலைகளைவளைத்துச் சுருட்டி கூடுகளைச் சேதப்படுத்துவது

1. கொக்கு 2. காகம் 3. அணில் 4. முசிறு

35. கறிசமைக்கபயன்படும் பூ வகை

1. பொன்னாவரசு 2. வில்வித்திரியம் 3. வற்றாளை 4. அகத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் 11 பகுதி– II இன் தொடர்ச்சி...

36. தோலின் மூலமாகசுவாசிக்கும் பிராணி

1. மீன் 2. மண்புழு 3. அணில் 4. திமிங்கிலம்

37. பொதிசெய்யப்பட்டஉணவில் கட்டாயமாகஅவதானிக்கவேண்டியது

1. உற்பத்தித்திகதி 2. தரச்சான்றிதழ் 3. காலாவதித்திகதி 4. குறியீடு

38. இலங்கையின் மிகப் புராதனமானதலைநகராகவிளங்கியது

1. கொழும்பு 2. அனுராதபுரம் 3. பொலன்னறுவை 4. நீர்கொழும்பு

39. சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாகமுறையிடவேண்டியதொலைபேசி இலக்கம்

1. 119 2. 1919 3.1929 4. 1984

40. கண்டி - யாழ்ப்பாணபிரதானவீதிவகைஎது?


1. $A_9$ 2. $A_5$ 3. $A_{11}$ 4. $A_3$

41. வடமாகாணத்தின் மாவட்டங்களின் எண்ணிக்கை

1. 3 2. 4 3. 5 4. 6

42. பூக்களின் பகுதிகளுள் ஒன்றாகஅமையாதது

1. வித்து 2. குறி 3. தம்பம் 4. சூலகம்

43.  இவ் முகபாவனைகுறிப்பது

1. மகிழ்ச்சி 2. கவலை 3. வியப்பு 4. கோபம்

44. பாதுகாப்பற்றசந்தர்ப்பமாககாணப்படுவது

1. வாயுஅடுப்பில் சமைத்தல் 2. பற்றைக்காடு


3. வழுக்கும் வீதி 4. உடைந்தபடிக்கட்டு

45. சூரியநமஸ்காரம் செய்யக் கூடியகாலம்

1. காலை 2. பகல் 3. மாலை 4. இரவு







# கல்விக் கதிர் வெளியீடு


## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 12


தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி I நேரம்- 45 நிமிடம்


1- 40 ...ரையானவினாக்களில் சரியானவிடையின் கீழ்க் கோடிடுக

தொடக்கத்தில் உள்ளஉருவிற்குப் பொருத்தமானஉருவினைதெரிவுசெய்க


01. 


1 2 3




02. 

1 2 3




03. 


1 2 3




ஆரம்பத்தில் தரப்பட்ட மூன்றுபடங்களுடன் பொருந்துகின்ற படத்தை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


04. 

1 2 3



05. 

1 2 3





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி மையத்தில் பட்மின்டன் போட்டி



முதல்முறையாக விண்வெளியில் இயங்கி வரும் சர்வதேச விண்வெளி மையத்தில் பட்மின்டன் போட்டி நடைபெற்றமை அனைவரிடமும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள விண்வெளி வீரர்கள் பட்மின்டன் விளையாடிய வீடியோ இணையதளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. இந்தப் போட்டியில் ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்கள் கலந்துகொண்டனர்.

புவி ஈர்ப்பு விசை இல்லாத இடத்தில் நடப்பதே சிரமமாக இருக்கும் நிலையில் வீரர்கள் பட்மின்டன் விளையாடினர். நான்கு பேரும் இரு அணிகளாகப் பிரிந்து விளையாடிய வீடியோ அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பூமிக்கு வெளியே பட்மின்டன் விளையாடியது இதுவே முதல்முறையாகும்.

இது தொடர்பாகப் பேசிய ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சாண்டர், விண்வெளியில் விளையாடுவது செவ்வாய்க் கிரகத்திற்குச் சென்று கொடி நடுவதற்குச் சமம் எனக் கூறினார். மேலும் இது வீரர்களுக்கு மன அமைதியைக் கொடுப்பதோடு அவர்கள் இடையே நட்புறவை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மாலைதீவில் அரசியல் நெருக்கடி :*

# இந்திய ராணுவத்தினர் ஆக்கிரமிப்பாளர் அல்லர்; சீனாவுக்கு மாலைதீவு முன்னாள் அதிபர் பதிலடி!

கொழும்பு, பெப்.09

இந்திய இராணுவத்தினர் ஆக்கிரமிப்பாளர்கள் அல்லர் என்று சீனாவிற்கு மாலைதீவு முன்னாள் அதிபர் முகமது நஷீத் பதிலடி கொடுத்துள்ளார்.

மாலைதீவில் நெருக்கடி நிலைப் பிரகடனம், அரசியல் கட்சியினர் மற்றும் நீதிபதிகளின் கைது நடவடிக்கை நிலையை மோசமாக்கியது.

இந்த நிலையில் இந்தியா மாலைதீவுக்கு இராணுவத்தை அனுப்ப வேண்டும் என முன்னாள் அதிபர் முகமது நஷீத் கோரிக்கை விடுத்தார்.

மாலைதீவு மக்களின் சார்பாக இந்தக் கோரிக்கையை நாங்கள் விடுக்கிறோம். மாலைதீவு அதிபரால் கைது செய்யப்பட்ட நீதிபதிகள், அரசியல் கட்சியினரை கைது செய்ய இராணுவ பலத்துடன் இந்தியா தூதரை அனுப்ப வேண்டும். இந்தியா அங்கு இராணுவத்தை நிலை நிறுத்தக் கோருகிறோம். அமெரிக்க வங்கி



கள் வழியாக மாலைதீவு பிராந்திய தலைவர்களுக்குச் செல்லும் நிதிப் பரிமாற்றத்தை அமெரிக்கா நிறுத்த வேண்டும், என மாலைதீவு முன்னாள் அதிபர் முகமது நஷீத் இந்தியாவிற்கு கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து மாலைதீவில் நிலவும் சூழ்நிலையை உன்னிப்பாக கவனிக்கின்றோம். அங்கு நிலை கவலையளிக்கின்றது என இந்திய வெளியுறவுத்துறை குறிப்பிட்டது.

இதற்கிடையே அதிபர் அப்துல்லா யாமீனுக்கு நெருக்கம் காட்டும் சீனா, மாலைதீவில் இராணுவத் தலையீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

இதுபோன்ற நிலையானது மாலைதீவின் நிலையை மேலும் மோசமாக்கும் என்று சீனா கூறியது. இப்போது சீனாவின் மூக்கை உடைத்து உள்ள முன்னாள் அதிபர் முகமது நஷீத், இந்தியா விடுதலை கொடுப்பவர்கள்தான் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் செயற்பாட்டை மாலைதீவு மக்கள் நேர்மறையாகவே பார்க்கிறார்கள். 1988இல் அவர்கள் மாலைதீவு வந்தார்கள், பிரச்சினையைச் சரிசெய்தார்கள். தங்கள் பணி முடிந்ததும் திரும்பி விட்டார்கள். அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் கிடையாது, அவர்கள் எங்களை விடுவித்தவர்கள்தான். எனவே இப்போதும் மாலைதீவு மக்கள் இந்தியாவை எதிர்பார்க்கின்றனர், என நஷீத் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

# 10 கோடி ஆண்டுகள் பழமையான நீண்ட வாலுடன் கூடிய சிலந்தி



தென்கிழக்கு ஆசியக் காட்டில் 10 கோடி ஆண்டுகள் பழமையான நீண்ட வால் உடைய சிலந்தியை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தென்கிழக்கு ஆசியக் காடுகளில் விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியில் பழமையான சிலந்தியைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தச் சிலந்தி மரப் பிசினில் உறைந்து இருந்துள்ளது. ஏறக்குறைய 10 கோடி ஆண்டிற்கு முன்பு வாழ்ந்த சிலந்தியாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதுவரை 50 ஆயிரம் சிலந்தி வகைகள் உலகில் உள்ளன. ஆனால் இந்தச் சிலந்திக்குத் தேள் போன்று நீண்ட வால் உள்ளது. இதன் மூலம் ஆரம்ப காலத்தில் இருந்த சிலந்திகள் தொடர்பாக அறிந்து கொள்ள இந்தக் கண்டுபிடிப்பு உதவும் எனக் கூறப்படுகிறது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிலந்தியின் நீளம் 6 மில்லிமீற்றர் ஆகும். இதில் பாதி அளவுக்கு வால் உள்ளது. பொதுவாகச் சிலந்திகள் வாயிலிருந்து வரும் நூல் போன்ற திரவம் மூலம் வலை பின்னி அதில் வாழ்கின்றன. ஆனால் இந்தச் சிலந்திக்கு வலைபின்னுவதற்கான எந்த உடல் அமைப்பும் இல்லை. இது தொடர்பாக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

# பிரம்மாண்ட ராணுவ அணிவகுப்பை நடத்த ஆசைப்படும் அதிபர் ட்ரம்ப்



பிற நாடுகளைப் போல அமெரிக்காவின் தலைநகரிலும் பிரம்மாண்ட இராணுவ அணிவகுப்பை நடத்த விருப்பப்பட்டுள்ள ட்ரம்ப், இது தொடர்பாக இராணுவ தளபதிகளிடம் ஆலோசனை கேட்டுள்ளார்.

அமெரிக்க அதிபராக கடந்தாண்டு பதவியேற்ற ட்ரம்ப் அரசு முறைப்பயணமாகப் பிரான்ஸ் சென்றிருந்தார். அப்போது, பரிஸ் நகரில் நடந்த போர் தின அணிவகுப்பில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பிரான்ஸ் வீரர்களின் கண்கவர் அணிவகுப்பை ரசித்த ட்ரம்ப், தற்போது அமெரிக்காவிலும் அது போன்ற அணிவகுப்பை நடத்த விருப்பப்பட்டுள்ளார்.

பொதுவாகவே, ஏதாவது போரில் பங்கேற்று வெற்றி பெற்ற பின்னர் தலைநகர் வொஷிங்டனில் இராணுவ வீரர்கள் வெற்றி அணிவகுப்பை நடத்துவர்கள். சிவில் போர், ஈராக் உடனான போர் ஆகியவற்றுக்குப் பின்னர் பிரம்மாண்ட அணிவகுப்பை வீரர்கள் நடத்தினர்.

இந்த நிலையில், வீரர்கள் மற்றும் அமெரிக்க இராணுவத்தைப் பெருமைப்படுத்தும் விதமாக தலைநகரில் ஏன் இராணுவ அணிவகுப்பு நடத்தக்கூடாது? என பென்டகன் தலைவரிடம் ட்ரம்ப் கேட்டுள்ளார் என வொஷிங்டன் போஸ்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும், முப் படைத் தளபதிகளிடமும் ட்ரம்ப் இது தொடர்பாக ஆலோசித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

# விரைவில் மரணத்தை சந்திக்கப் போகிறேன்

முன்னாள் போப் பெனடிக்ட்

விரைவில் மரணத்தை சந்திக்கப்போகிறன், கடவுளின் இல்லத்திற்குப் புனித பயணம் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றேன் என முன்னாள் போப் பெனடிக்ட் அறிவித்துள்ளார்.

முன்னாள் போப் பெனடிக்ட் ரோம் நகரில் உள்ள சிறிய மடத்தில் தங்கி இருக்கின்றார். அவருக்கு உதவி செய்வதற்காக 4 கன்னியாஸ்திரிகளும், தனி செயலாளர் ஒருவரும் உள்ளனர்.

தற்போது பெனடிக்டுக்கு 91 வயது ஆகிறது. இந்த நிலையில் அவர் ஓர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

எனது கடைசிக் கால வாழ்க்கை எப்படிச் செல்கிறது என்பதை பலரும் அறிவதற்கு ஆவலாக இருக்கிறார்கள். என்னைச் சுற்றி எல்லாமே நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. என்மீது மக்கள் மிகவும் அன்பு காட்டி என்னைப்பற்றி விசாரிப்பது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதே நேரத்தில் நான் இப்போது 90 வயதைக் கடந்து விட்டேன். எனது உடல் உள் உறுப்புகள் பணி செய்வதைக் குறைத்துக் கொண்டுள்ளன. நான் வலிமை குன்றி வருகிறேன். நான் மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறேன். நான் கடவுளின் இல்லத்திற்குப் புனிதப்பயணம் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# சக்திவாய்ந்த ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட கார்

சக்திவாய்ந்த ரொக்கெட் மூலம் விண்ணில் கார் ஒன்று செலுத்தப்பட்டுள்ளது.

பால்கோன் ஹெவி என்ற உலகின் மிகவும் சக்திவாய்ந்த ரொக்கெட் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி நிலையத்திலிருந்து ஏவப்பட்டது.

ஸ்பேஸ் எக்ஸ் என்ற தனியார் நிறுவனத்தால் இந்த ரொக்கெட் தயாரிக்கப்பட்டது.

இந்தப் பால்கோன் ரொக்கெட்டில் கார் ஒன்று வைத்து ஏவப்பட்டது. இதுவே விண்வெளிக்குச் செல்லும் முதல் காராகும். ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் டெஸ்லா நிறுவனம் அமெரிக்காவைச் சேர்ந்த, தொழில்முனைவர்



எலான் மஸ்க்குக்குச் சொந்தமான காரே ரொக்கெட்டில் வைத்துச் செலுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



## பிருதிவி - 2 ஏவுகணை சோதனை வெற்றி




அணு ஆயுதத்தைச் சுமந்து சென்று குறிப்பிட்ட இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட பிருதிவி-2 ஏவுகணை சோதனையை இந்தியா நேற்றுமுன்தினம் நடத்தியது. ஒரிசா மாநிலம் சந்திபூரில் உள்ள ஒருங்கிணைந்த ஏவுகணைத் தளத்தில் நகரும் ஏவுதளத்தில் இருந்து ஏவுகணை செலுத்தப்பட்டது. இந்தச் சோதனை வெற்றிகரமாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தரையில் இருந்து சென்று தரையில் உள்ள மற்றொரு இலக்கை தாக்கும் திறன் கொண்ட பிருதிவி-2 ஏவுகணை இரு இயந்திரங்களைக் கொண்டது. அத்துடன் 500 முதல் ஆயிரம் கிலோ வரையிலான அணு ஆயுதத்தைச் சுமந்து செல்லும் ஆற்றல் கொண்டது. (ப)

# குறுக்குவழியில் முதலமைச்சராக வரும் எண்ணம் எனக்கு இல்லை

ராயபுரம், பெப்.09

குறுக்குவழியில் முதலமைச்சர் ஆகும் எண்ணம் எனக்கு இல்லை என்று டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

டி.டி.வி.தினகரன் எம்.எல்.ஏ. நேற்றுமுன்தினம் 5ஆவது கட்டமாக ஆர்.கே.நகர் தொகுதி மக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

உள்ளே அழுதுகொண்டு வெளியே சிரிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. யார் அவ்வாறு செயற்படுகிறார்கள் என மக்களுக்குத் தெரியும். இதற்கெல்லாம் ஜெயக்குமார் விரைவில் பதில் சொல்லியாக வேண்டும். அடுத்த சட்டமன்றத் தேர்தலில் ஜெயக்குமார் முடிந்தால் ராயபுரம் தொகுதியில் போட்டியிட்டு கட்டுப்பணம் வாங்கிக் காட்டட்டும்.

குறுக்கு வழியில் முதலமைச்சராக நான் என்றும் நினைத்ததில்லை. அதை விரும்புவதும் இல்லை. எங்கள் கட்சி 234 தொகுதிகளில் போட்டியிட்டு தனிப்பெரும்பான்மை கிடைத்தால் மட்டுமே நான் முதலமைச்சர் ஆவேன். இவர்களைப்போல சசிகலா வழங்கிய முதலமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டு நாடகமாட எனக்குத் தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா மரண விசாரணை ஆணையத்தில் இருந்து எனக்கு ஆஜராக சம்மன் வந்துள்ளது. நான் கண்டிப்பாக ஆஜராவேன். சசிகலா தரப்பில் அவரது வழக்கறிஞர் ஆஜராகி வருகிறார். ஆதலால் அவர் ஆஜராக வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துள்ளார்.



தினகரன் தெரிவிப்பு

# ரஜனியுடன் கூட்டணியா? கமல் விளக்கம்

ரஜனியும் கமலும் தீவிர அரசியலில் ஈடுபட்டு வரும் நிலையில், ரஜனியுடன் ஒன்று சேர்வீர்களா என்ற கேள்விக்குக் கமல் பதிலளித்துள்ளார்.

நடிகர்கள் ரஜனியும், கமலும் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்போது இருவருமே கட்சி உறுப்பினர்கள், கட்சிக் கூட்டங்கள் நடத்துவது தொடர்பாகத் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர். இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைப்பார்கள் என்று எதிர்பார்த்த நிலையில், இதற்கு காலம் தான் பதில் சொல்லும் என்று ரஜனி கூறியிருந்தார்.

தற்போது கூட்டணி தொடர்பாக கமல் அளித்த விளக்கத்தில், ரஜனியும் நானும் சேர வாய்ப்புள்ளதா? என்ற கேள்விக்கு உண்மையில் காலம்தான் பதில் சொல்லும். இருவரின் கொள்கை விளக்கங்கள் பொருந்துகின்றனவா? என்று பார்க்க வேண்டும். ரஜனியும் நானும் சேர்வது என்பது இப்போது எடுக்கக்கூடிய முடிவே கிடையாது. நானும் அவரும் சேர்வது தேவையா? என்பதை இருவருமே யோசிக்க வேண்டும் – என்றார்.

எனக்கு ஏற்பட்டுள்ள அரசியல் சந்தேகத்தை கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தீர்த்து வைக்கிறார். பல கட்சிகளில் வாய்ப்பு கிடைக்காமல் உள்ள நல்லவர்கள் வந்தால் கண்டிப்பாக சேர்த்துக்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.



## இஸ்லாமியர்கள் இந்தியாவில் ஏன் இருக்க வேண்டும்?

### பா.ஜ.க. தலைவர் சர்ச்சைப் பேச்சு



பல்வேறு சர்ச்சைகளில் சிக்கிய பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் வினெய் காதியார், தேசம்பிரிக்கப்பட்டபோது இஸ்லாமியர்களுக்கு அவர்களுக்கான இடம் வழங்கப்பட்டுவிட்டது. அவர்கள் பாகிஸ்தான் அல்லது பங்களாதேஷ் செல்ல வேண்டும் எனப் பேசியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அயோத்தியில் இராமர்கோவில் கட்டவேண்டும் என்பதில் தீவிரமாக பிரசாரம் செய்யும் தலைவர்களில் ஒருவரான வினெய் காதியார், இஸ்லாமியர்களை தேசப்பற்று விவகாரத்தில் கடுமையாகத் தாக்கி உள்ளார். வந்தே மாதரம் மற்றும் இந்திய தேசியக் கொடிக்கு மரியாதை அளிக்காதவர் களுக்குக் கடுமையான தண்டனையைக் கொடுக்க வேண்டும். இந்தத் தேசத்தில் இஸ்லாமியர்கள் இருக்கக் கூடாது. மக்கள் தொகையின் அடிப்படையில் அவர்களுக்கு இடம் பிரித்து அளிக்கப்பட்டுவிட்டது. அவர்களுக்கான பங்கைக் கொடுத்த பின்னர் அவர்கள் ஏன் இங்கு இருக்க வேண்டும்? அவர்கள் பாகிஸ்தான் அல்லது பங்களாதேஷ் செல்ல வேண்டும், அவர்களுக்கு இங்கு ஒன்றும் கிடையாது, எனக் கூறியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

## டுவிட்டரில் மோடியை தொடர்வோர் எண்ணிக்கை 4 கோடியைத் தாண்டியது



புதுடில்லி, பெப்.09

டுவிட்டரில் பிரதமர் மோடியைத் தொடர்வோர் எண்ணிக்கை 4 கோடியைத் தாண்டியுள்ளது.

இந்திய அரசியல்வாதிகளில் யாருக்குமே இல்லாத வகையில் பிரதமர் மோடிக்கு டுவிட்டரில் ஆதரவு இருந்து வருகிறது. அந்தவகையில் சமீபத்தில் எடுக்கப்பட்ட ஆய்வில் அவரை டுவிட்டரில் 4 கோடியே 48 ஆயிரத்து 316 பேர் பின்தொடருகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. ஆனால் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தியை 57 லட்சத்து 67 ஆயிரத்து 118 பேர் மட்டுமே பின் தொடர்பவர்களாக இருக்கின்றனர்.

சர்வதேச அளவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பைப் பின்தொடர்வோர் எண்ணிக்கை 4 கோடியே 75 லட்சத்து 18 ஆயிரத்து 16 ஆக உள்ளது. அதே சமயம் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை வெறும் 8 லட்சத்து 48 ஆயிரம் பேர் மட்டும் பின்தொடர்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தர்ம யுத்தம் வெற்றி - ஓ.பி.எஸ். பேட்டி



தர்மயுத்தம் தொடங்கியதன் நோக்கம் நிறைவேறிவிட்டது எனத் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்.

தர்மயுத்தம் தொடங்கியதன் நோக்கம் நிறைவேறிவிட்டது. மேலும், நியூட்ரினோ ஆய்வுத்திட்டத்தைச் செயற்படுத்துவதால் பாதிப்பு இருக்கிறதா என்பது தொடர்பாக ஆய்வு செய்யப்படும். நியூட்ரினோ திட்டத்தினால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அந்தத் திட்டம் கைவிடப்படும்.

ஜெயலலிதா மறைந்ததும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஓ.பன்னீர்செல்வம், திடீரென அந்தப் பதவிக்குச் சசிகலா வர இருந்த நிலையில் கடும் அதிருப்தி அடைந்தார். இதனால் கடந்த ஆண்டு இதே நாளில் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் தியானத்தில் அமர்ந்தார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், சசிகலா தலைமையில் இருந்து பிரிகின்றேன் என அறிவித்ததுடன், அவர்களுக்கு எதிராக தர்மயுத்தம் தொடங்கியுள்ளேன் என்றும் கூறினார்.

தற்போது சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் கட்சியில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டு, பிரிந்த அணிகள் இணைந்துள்ள நிலையில், தனது தர்ம யுத்தத்தின் நோக்கம் நிறைவேறியுள்ளது எனக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்கா 2ஆவது டெஸ்ட்:

# இலங்கை : 222 ஓட்டங்கள் வங்கம் : 4 விக்கெட்டுக்கு 56

டாக்காவில் நடைபெற்று வரும் பங்களாதேஷிற்கு எதிரான 2ஆவது டெஸ்டில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 225 ஓட்டங்கள் எடுத்துள்ளது

பங்களாதேஷ்-இலங்கை இடையிலான சிட்டாகாங் முதல் டெஸ்ட் சமநிலையான நிலையில் 2ஆவது டெஸ்ட் டாக்காவில் நேற்று ஆரம்பமாகியது. நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அந்த அணியில் அகில தனஞ்ஜெய முதல் முறையாக டெஸ்ட் அணியில் அறிமுகமானார். பங்களாதேஷ் அணியில் அப்துர் ரசாக் சேர்க்கப்பட்டார்.

குஷல் மெண்டிஸ், கருணாரத்ன ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள். பங்களாதேஷ் சுழற்பந்து வீச்சாளருடன் ஆட்டத்தைத் தொடங்கியது. கருணாரத்ன 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த தனஞ்ஜெய டி சில்வா 19 ஓட்டங்களிலும், குணதிலக 13 ஓட்டங்களிலும், சந்திமல் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

மறுமுனையில் விளையாடிய குஷல்மெண்டில்சிறப்பாகவிளையாடி அரைச்சதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய அவர் 68 ஓட்டங்கள் எடுத்துப் பவிலியன் திரும்பினார்.



6ஆவது வீரராகக் களம் இறங்கிய ரோசன் சில்வா சிறப்பாக விளையாடினார். அவர் 56 ஓட்டங்கள் எடுத்து கடைசி விக்கெட்டாக ஆட்டமிழக்க இலங்கை அணி 65.3 ஓவரில் 222 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் நேற்று முதலாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 22 ஓவர் களில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 56 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# 3ஆவது ஒருநாள் போட்டியிலும் இந்தியா வெற்றிவாகை



தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி ஆறு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கிடையே நடந்த முதல் இரண்டு போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரில் 2:0 என்று முன்னிலையில் இருந்தது.

அதைத்தொடர்ந்து இவ்விரு அணிகளுக்கிடையேயான மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் கேப்டவுனில் நடைபெற்றது. துடுப்பெடுத்தாடிய இந்திய அணி இறுதியாக 50 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 303 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக கோஹ்லி 160 ஓட்டங்கள், தவான் 76 ஓட்டங்கள் எடுத்தனர். தென்னாபிரிக்க அணி சார்பில் சுழற்பந்து வீச்சாளர் டுமினி 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

304 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 40 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 179 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் இந்திய அணி 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 3:0 என்று முன்னிலையில் உள்ளது. அதுமட்டுமின்றி தென்னாபிரிக்க மண்ணில் முதல் முறையாக ஹாட்ரிக் வெற்றியைப் பதிவு செய்து சாதனை படைத்துள்ளது.

தற்போது ஹாட்ரிக் வெற்றி பெற்றுள்ள இந்திய அணி, இன்னும் ஒரு போட்டியில் வெற்றி பெற்றுவிட்டால் தொடரைக் கைப்பற்றிவிடும், அப்படி தொடரைக் கைப்பற்றிவிட்டால் கோஹ்லி பற்றி பேசிய வாய்களுக்கு பூட்டுத் தான் என்று அவரது ரசிகர்கள் கூறி வருகின்றனர்.

(ப)




# 400 விக்கெட்டுகள்; டோனி சாதனை



இந்திய அணியின் முன்னாள் கப்டன் டோனி 315 ஒருநாள் போட்டியில் விளையாடி 401 விக்கெட்டுகள் வீழ்த்திய முதல் இந்திய விக்கெட் காப்பாளர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குல்தீப் யாதவ் பந்தில் தென்னாபிரிக்க கப்டன் மெர்க்ராமை விக்கெட் காப்பாளர் டோனி ஆட்டமிழப்புச் செய்தார். இதன்மூலம் அவர் 400 விக்கெட்டுகளை வீழ்த்தக் காரணமாக இருந்தவர் என்ற சாதனையைப் படைத்தார்.

315 ஒருநாள் போட்டியில் விளையாடி 401 விக்கெட் வீழ்த்தக் காரணமாக இருந்தார். இதன் மூலம் முதல் இந்திய விக்கெட் காப்பாளர் என்ற சாதனையை அவர் படைத்தார். சர்வதேச அளவில் 4ஆவது விக்கெட் காப்பாளர் ஆவார்.

சங்கக்கார (இலங்கை -482) முதல் இடத்திலும், கில்கிறிஸ்ட் (அவுஸ்திரேலியா - 472) 2ஆவது இடத்திலும், மார்க் பவுச்சர் (தென்னாபிரிக்கா - 424) 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.



# சிங்கிள் ஓடிச் சதம்; கோஹ்லி சாதனை

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் விராட் கோஹ்லி சிங்கிள் ஓடியே 100 ஓட்டங்களை எடுத்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

இந்திய அணிக் கப்டன் விராட் கோஹ்லி நேற்றுமுன்தினம் 3 ஆவது வீரராகக் களம் இறங்கி கடைசி வரை ஆட்டம் இழக்காமல் இருந்தார். அவர் 159 பந்துகளை சந்தித்து 160 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 12 பவுண்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கும்.

அவரது ஓட்டங்களில் பவுண்ரி, சிக்ஸர் மூலம் 60 ஓட்டங்கள் அடங்கும். மீதியுள்ள 100 ஓட்டங்களை கோஹ்லி ஓடித்தான் எடுத்தார். ஓர் ஓட்டமாக 75 முறையும், 2 ஓட்டங்களாக 11 தடவையும், 3 ஓட்டங்களாக ஒரு தடவையும் எடுத்தார். 100 ஓட்டங்களை ஓடி எடுத்த முதல் இந்திய வீரர் கோஹ்லி ஆவார். சர்வதேச அளவில் 5ஆவது வீரரும் ஆவார்.

இதே மைதானத்தில் தென்னாபிரிக்க வீரர் டுபிளிஸ்சிஸ் 103 ஓட்டங்களை ஓடி எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் கூறியவை வருமாறு: –

கடந்த காலங்கள் போன்று தேர்தல் வன்முறைகள் குறித்து இம் முறை எந்தவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. ஆயினும் தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்தே நாற்பது முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

இத்தகைய முறைப்பாடுகள் குறித்து தேர்தல் முறைப்பாட்டு அலுவலகங்களினூடாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன .

வாக்கெண்ணும் ஏற்பாடுகள், இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்குரிய பஸ் சேவைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என தேர்தலுக்கான அனைத்து முன்னேற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என மொத்தமாக 17 சபைகளுக்கும் பல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 4 லட்சத்து 68 ஆயிரத்து 476 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

521 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒரு வாக்கெண்ணும் நிலையம் என்ற அடிப்படையில் 243 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வட்டாரங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள வாக்கெண்ணும் நிலையங்களின் முடிவுகளை அறிவிக்கும் மத்திய வாக்கெண்ணும் நிலையமாகயாழ். மத்தியகல்லூரியைத் தெரிவு செய்திருக்கிறோம். அங்கு வைத்துத்தான் இறுதி முடிவுகள் அறிவிக்கப்பட இருக்கின்றன. இந்த முடிவுகள் அனைத்தும் பெரும்பாலும் அன்றைய தினம் இரவு சுமார் 8 மணிக்கு அறிவிக்கப்படும் மென்றும் எதிர்பார்க்கின்றோம்.

தபால் மூல வாக்குகள் அந்தந்த வட்டாரங்களில் தனியாக வைத்து எண்ணப்படும். ஆனால் 50 இற்கு குறைவான தபால் மூல வாக்குகளாயின் ஏனைய வாக்குச்சீட்டு வாக்குகளுடன் சேர்த்தே அவை எண்ணப்படும்.

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல் கடமைகளுக்காக ஆறாயிரத்து ஐந்நூறு அரச அலுவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் இரண்டு பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் பணிகளுக்காக அரச பஸ் மற்றும் தனியார் பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்து முகாம்களில் தற்போதும் தங்கியுள்ள மக்கள் மற்றும் தூர இடங்களில் இருக்கின்ற வாக்காளர்களுக்கும் வாக்களிப்பதற்குரிய வசதிகள் – அதாவது பஸ் ஏற்பாடுகள் – செய்யப்பட்டிருக்கின்றன.

யாழ். மாவட்டத் தேர்தல் மத்தியநிலையமாக இருக்கின்ற யாழ். மத்தியகல்லூரியிலிருந்து வாக்குப் பெட்டிகள் ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்கள் என்பவற்றில் இன்றையதினம் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இவ்வாறு இத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்புகள் என அனைத்தும் முழுமையாகபூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

10 ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை மக்கள் தமது வாக்குகளை அளிக்க முடியும். அதற்கு அடையாள அட்டை அவசியம். அவ்வாறு அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் தற்காலிக அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டுக் களைப் பயன்படுத்திக் கொண்டு வாக்களிக்க முடியும். வாக்களிப்பு முடிந்தவுடன் வாக்கெண்ணும் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. – என்றார்.

## முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வில்சிலநபர்கள்கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தலையில் மோசமாகக்காயமடைந்த அவர், மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மந்திகை வைத்தியசாலைப் பணியாளரான இவர் மீது கன்பொல்லையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மின்சாரமில்லாத இருட்டு வேளை அவரது வீட்டுக்கு வந்தசிலர் அவரைப்பெயர் சொல்லிக் கூப்பிட்டு அழைத்துள்ளனர். அதனையடுத்து வீட்டுப் படலைக்கு வந்து அதை திறந்த போது திடீரென அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தலையில் மோசமான தாக்குதலுக்கு இலக்கான அவர் மயங்கிச் சாய்ந்தார். அதன் பின்னரும் அவர் மீது தாக்குதல் நடத்திய நபர்கள், பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்படுமென்று எதிர்பார்க்கலாம் எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

யாழ்.மாவட்டத்தின் பல பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள பொது மக்களின் காணிகளில் படையினர் நிலை கொண்டுள்ளனர். அக் காணிகளை விடுவிப்பது குறித்து யாழ். மாவட்ட இராணுவத் தளபதியுடன் பேசியிருக்கின்றோம். அதற்கு இராணுவத் தளபதியும் சாதகமான பதிலைக் கொடுத்திருக்கின்றார்.

குறிப்பாக தெல்லிப்பழை, கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் படையினர் வசமிருக்கின்ற காணிகளை விடுவித்து அங்கிருக்கின்ற படையினரை வேறு இடங்களுக்கு நகர்த்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கின்ற சில பாடசாலைகளையும் விடுவிக்கு மாறுபடையினரிடம்கோரியிருக்கின்றோம். இதனையும் அவர்கள் சாதகமாகப் பரிசீலிப்பார் எனத் தெரிவித்திருக்கின்றனர். இதற்கமைய அடுத்த சில மாதங்களில் படையினர் வசமிருக்கின்ற – தனியாருக்குச் சொந்தமான – காணிகள் விடுவிக்கப்படும். – என்றார். (உ)

## 2 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) லாக 1500 பேர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என மேலதிக அரச அதிபர் திரேஷ்குமார் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் வாக்களிப்புக்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளன. வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்களப் பிரதே சபை, வெண்கலச்செட்டிகுளம்பிரதேச சபை, வவுனியா வடக்குப் பிரதேச சபை என்பவற்றுக்கு 103 அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கானதேர்தலுக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

தேர்தல் திணைக்களம், மாவட்ட செயலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய திணைக்களங்களும் இணைந்து தேர்தல் கடமைக்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றோம். நாளை (இன்று) வவுனியா மாவட்டத்தில் உள்ள 148 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்படும். வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்கக் கூடிய முறையில் இந்த 148 வாக்களிப்பு நிலையங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போதைய தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அந்த அந்த வாக்களிப்பு நிலையங்களில்தான் வாக்குகள் எண்ணும் நடவடிக்கைகள் இடம்பெறும். இருந்தாலும் நடைமுறை சார்ந்த பிரச்சினைகள் சிலவற்றைக் காரணமாகக் கொண்டு வவுனியா மாவட்டத்தில் 56 வாக்கு எண்ணும் நிலையங்களை ஏற்பாடு செய்துள்ளோம். அந்த நிலையங்களில்வாக்குஎண்ணப்பட்டு வட்டார முடிவுகள் மாவட்ட செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுப் பின்னர் முடிவுகள் உத்தியோக பூர்வமாக மாவட்ட செயலகம் ஊடாக வெளியிடப்படும்.

இந்தத் தேர்தல் நடவடிக்கைக்காக வவுனியா மாவட்டத்தில் 2,000 அரச அலுவலர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். கொழும்பில் இருந்து உதவித் தேர்தல் அத்தாட்சி அலுவலர்கள் 155 பேரை அழைத்து இருக்கின்றோம். வவுனியா மாவட்டம் முழுவதும் 39 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரை நியமித்துள்ளோம். வாக்களிப்பு தொடர்பான தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்வதற்கும், அதனைகண்காணிப்பதற்கும் என 7 மகா வலயங்களையும் உருவாக்கியிருக்கின்றோம். 10 ஆம்திகதிவாக்களிப்பு முடிந்தவுடனேயே வாக்குகள் எண்ணுகின்ற நடவடிக்கையும் இடம்பெறும். – என்றார். (ஐ–100)

## வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி இருந்து இரண்டு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன எனவும் அவை குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் யாழ்.மாவட்ட தெரிவத் தாட்சி அலுவலர் தெரிவித்துள் ளார்.

நேற்றையதினம் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயம் சம்பந்தமாக தகவல் வெளியிட்டார்.

## பொன்னாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெள்ளிக்கிழமைமுதல்மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்த வீதி ஊடாக பஸ்சேவை கடந்த செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட போதும் மறுநாள் புதன்கிழமை அது இடைநிறுத்தப்பட்டது. பஸ் சேவைக்காகப் போதிய பஸ்கள் இல்லாமையே அதுஇடைநிறுத்தப்படக்காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், அந்தப் பஸ் சேவையை இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

கடந்த 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன 27 வருடங்களாகப் பாதுகாப்பு காரணங்களுக்காக மூடி வைக்கப்பட்டிருந்த பொன்னாலை – பருத்தித்துறை வீதியை மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடுவதாக அறிவித்தார்.

அந்தப் பாதை ஊடான உத்தியோக பூர்வ போக்குவரத்து 6 ஆம் திகதியாழ்ப்பாணஅரசாங்க அதிபர் வேதநாயகன் மற்றும் யாழ்ப்பாண இராணுவகட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி ஆகியோரின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு முதற்கட்டமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்த மான பஸ்கள் இப்பாதையூடாக நாள் தோறும் பிரயாணம் செய்யும் என்றும், அதன் பின்பு தனியார் வாகனங்களுக்கும் அனுமதி வழங்கப்படும் என்றும் எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து பஸ் சேவைகள் நேர அட்டவணைப்படி இடம்பெறும் என்றும் அதிபரினாலும் இராணுவக் கட்டளைத் தளபதியினாலும் ஏற்கனவே தெளிவாக ஊடகங்களுக்கும் மக்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், சில ஊடகங்களும் இணையத் தளங்களும் குறிப்பிட்ட பாதை பாதுகாப்பு தரப்பினால் மீண்டும் மூடப்பட்டு விட்டது எனச் செய்திகளை வெளியிட்டுப் பொதுமக்களைத் தவறாக வழிநடத்தியிருக்கின்றன என ஜனாதிபதி செயலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதன் காரணமாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு உடனடியாக இது தொடர்பில் கவனம் செலுத்தியது. ஆயினும், அவ்வாறு குறிப்பிட்ட பாதை பாதுகாப்புத் தரப்பினால்மூடப்படவில்லைஎன்பதை அது கண்டறிந்தது. அதனையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கமைய இவ்வீதியில் பின்வருமாறு போக்குவரத்துச்சேவைகள் நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீண்டும் ஒரு மணிக்கு கீரிமலையிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணிப்பதோடு எதிர்வரும் திங்கட்கிழமை முதல்தினம் மூன்று பஸ் சேவைகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல்தினமும் காலை 6.45 முற்பகல் 11 மணி மற்றும் பிற்பகல் 3.15 மணிக்கு பருத்தித்துறை பஸ்நிலையத்திலிருந்து கீரிமலை நோக்கி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் புறப்படவுள்ளன. கீரிமலையிலிருந்து தினமும் 8.30 மணி, நண்பகல் 1 மணி மற்றும் மாலை 5 மணிக்கு பருத்தித்துறை நோக்கி பஸ்கள் பயணிக்கும். – என்றுள்ளது. (ஐ)

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதிக்கு எதிராக இந்த முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநராக வெளிநாட்டுப் பிரஜை ஒருவரை நியமித்தமை மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சராக அந்த அமைச்சுக்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இந்த முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

மகாவலி அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனுராத ஜயரட்ன மற்றும் சுற்றாடல் அதிகார சபையின் முன்னாள் தலைவர் உள்ளிட்ட சிலருக்கு எதிராகவும் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு கூறியுள்ளது. (ஐ)

## தப்பினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மோசடியுடன் பிரதான சந்தேக நபராகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தஉதயங்கவீரதுங்கவுக்குக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

நீண்டகாலமாகத் தலைமறைவாகியிருந்த அவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை அபுதாபிசர்வதேச விமான நிலையத்தில் வைத்துச்சர்வதேசப்பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, அவரை இலங்கைக்கு அழைத்துவருவதற்கான முயற்சிகளை வெளிவிவகார அமைச்சும், பொலிஸ்நிதிமோசடிவிசாரணைப் பிரிவும் இணைந்து மேற்கொண்டன. எனினும் அது சாத்தியப்படவில்லை.

இந்தநிலையில்கைதுசெய்யப்படும் அளவுக்கு எந்தவித சர்வதேசப் பிடியாணையும் பிறப்பிக்கப்படாதமை காரணமாகத் தன்னைத் தொடர்ந்து தடுத்து வைத்திருக்கமுடியாதென்று கூறி சர்வதேசப் பொலிஸார் விடுவித்துள்ளனர் என உதயங்க வீரதுங்க தனது முகப்புத்தகத்தில் நேற்று வியாழக்கிழமை பதிவிட்டுள்ளார்.

பழிவாங்கும் நல்லாட்சி அரசு ஆட்சியில் இருக்கும்வரை தாம் நாடுதிரும்பப் போவதில்லைஎன்றும்உதயங்கவீரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உதயங்கவின் இந்த முகநூல் பதிவு தொடர்பாகத்தம்மால்கருத்துஎதையும் வெளியிட முடியாது என்று இலங்கைப்பொலிஸ்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

உதயங்க வீரதுங்கவை நாடுகடத்தும் சாத்தியம் தொடர்பாக, இலங்கையில் இருந்து சென்ற அதிகாரிகள் குழு டுபாயில் பேச்சுக்களை நடத்திவருவதாகவும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத் மாநாட்டில் பங்கேற்க இந்தியா செல்கிறார் பிரதமர் ரணில்!

கொழும்பு, பெப். 09

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம்மாத நடுப்பகுதியில் இந்தியாவுக்குப் பயணம் ஒன்றை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் ஹைதராபாத் நகரில், எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம், 21 ஆம் திகதி வரை, உலக தகவல் தொழில்நுட்ப காங்கிரஸின் 22 ஆவது மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பார் என்று இந்தியாவின் ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



இந்த மாநாட்டுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார். எனினும், இந்தியப் பிரதமர் செயலகம் இன்னமும், அவர் பங்கேற்பதை உறுதிப்படுத்தவில்லை.

உலக தகவல் தொழில்நுட்ப காங்கிரஸின் மாநாடு முதல் முறையாக இந்தியாவில் நடக்கவுள்ளது. இந்த மாநாட்டில் 30இற்கும் அதிகமான நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## காலி இறப்பர் தொழிற்சாலையில் தீப்பரவல்!

கொழும்பு, பெப். 09

காலி - போகஹகொட பிரதேசத்தில் அமைந்துள்ள இறப்பர் தொழிற்சாலையில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தொழிற்சாலை வளாகத்தில் குவிக்கப்பட்டிருந்த இறப்பர் தொகையில் இவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டுள்ள நிலையில், தொழிற்சாலைக் கட்டடம் அமைந்துள்ள பகுதிக்கு அது பரவியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புப் பிரிவினர் ஈடுபட்டனர் என காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

## கேரளா கஞ்சா பொதிகளுடன் சிலாபத்துறையில் 3 பேர் கைது



மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சிலாபத்துறை பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் காலை சுமார் ஒரு கோடியே 54 லட்சம் ரூபா பெறுமதியான கேரளா கஞ்சா பொதிகளை மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளதோடு, சந்தேகத்தின் பேரில் 3 சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் எச்.என்.சியந்த பீரிஸின் வழிகாட்டலின் கீழ் செயல் பட்ட மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளின் மூலமே சுமார் ஒரு கோடி 54 லட்சம் ரூபா பெறுமதியான 154 கிலோ கிராம் எடை கொண்ட கேரளா கஞ்சா பொதிகளை மீட்டுள்ளது.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் சிலாபத்துறை பகுதியை சேர்ந்த 3 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். விசாரணைகளின் பின் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர் என மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (க)

## மத்திய வங்கி பிணை முறி மோசடியை விடவும் மஹிந்த பெரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார்!

கொழும்பு, பெப். 09

மத்திய வங்கி பிணை முறி மோசடியை விடவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் இடம்பெற்ற மிகப் பெரிய மோசடி மத்திய வங்கி பிணை மோசடி கிடையாது. பிணை முறி கொடுக்கல் வாங்கல்களிலும் மோசடி இடம்பெற்றது. கள்வர்களை சிறையில் அடைத்துவிட முடியும்.

எனினும், நடுப் பகலில் மஹிந்த பெரும் கொள்ளையில் ஈடுபட்டு உள்ளார்.

மஹிந்தவின் நடவடிக்கைகள் சரியில்லை என்ற காரணத்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மக்கள் ஜனாதிபதியாக நியமித்தனர்.



துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

நாட்டை பாதுகாத்துக் கொடுத்த காரணத்திற்காக கிராமங்களின் அபிவிருத்தியை தடுத்து நிறுத்த முடியாது என துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## யாழில் வாக்களிப்புக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி!

கொழும்பு, பெப். 09

யாழ். மாவட்டத்தில் நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு வாக்களிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான நா.வேத நாயகன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முடிவுபெற்றன. தற்பொழுது அமைதியான முறையில் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் குறிப்பிடத்தக்க பெரிய சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ். மாவட்டத்தில் 521 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் சுமார் 7 முதல் 8 அரச அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுவர்.

தேர்தல் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்காக 5 முறைப்பாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பொலிஸ் அதிகாரிகளும் கடமைகளில் ஈடுபடவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# புகை பரிசோதிக்கச் சென்ற இராணுவ வாகனம்; சரியான ஆவணங்கள் இன்மையால் நிராகரிப்பு!





முல்லைத்தீவு, பெப். 09

முல்லைத்தீவில் புகைக்கசிவு பரிசோதிக்கும் நிலையத்திற்குச் சென்ற இராணுவ வாகனம் ஒன்று பரிசோதனை செய்ய முடியாது என நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

வாகனம் ஒன்று புகைக்கசிவு தரநிர்ணயத்திற்கு அமைவானது என உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் சான்றிதழுக்கு அமைவாகவே வாகன வரி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிலையில் வாகன புகைக்கசிவு பரிசோதனைக்காக நேற்றுக் காலை கொண்டு செல்லப்பட்ட இராணுவ வாகனம் ஒன்றிற்கு சரியான ஆவணங்களை இராணுவத்தினர் சமர்ப்பிக்கத் தவறியுள்ளனர்.

இதன் காரணத்தினால் புகைக்கசிவு பரிசோதனை செய்ய முடியாது என அந்தத் தர நிர்ணய நிறுவனம் தெரிவித்துவிட்டது.

இந்த நிலையில், புகைக்கசிவு பரிசோதகர்களுடன் இராணுவத்தினர் பேச்சு நடத்தியுள்ளபோதும் அது பயனளிக்கவில்லை.

சரியான ஆவணங்கள் சமர்ப்பிப்பதன் மூலமே புகைக் கசிவு பரிசோதனை செய்ய முடியும் என பரிசோதகர்கள் இராணுவத்தினருக்குத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# 14 முதிரைமரக் குற்றிகளுடன் தேராவிலில் ஒருவர் கைது!



முல்லைத்தீவு, பெப்.09

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் வனப் பகுதியில் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 14 மரக்குற்றிகளுடன் ஒருவரை நேற்று முன்தினம் மாலை முல்லைத்தீவு விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் வனப் பகுதியில் மரக்கடத்தல் இடம்பெறுவதாக முல்லைத்தீவுவிசேடஅதிரடிப்படையினருக்குக்கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் அங்கு சென்ற அவர்கள், கடத்துவதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 75ஆயிரம் ரூபா பெறுமதியான 14 முதிரை மரக்குற்றிகளைக் கைப்பற்றினர். அத்துடன் ஒருவரைக் கைது செய்தனர்; மோட்டர் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகள், மோட்டர் சைக்கிள் என்பவற்றுடன் சந்தேக நபரையும் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் அவர்கள் பாரப்படுத்தியுள்ளனர். (ஐ)

# கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர் கைது

## வவுனியா பொலிஸார் அதிரடி



வவுனியா, பெப்.09

பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரை வவுனியாப் பொலிஸார் அதிரடியாகக்கைதுசெய்துள்ளனர்.

செட்டிகுளம், மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்களில்ஈடுபட்டவர்எனக்கருதப்படும்புங்குடுதீவைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தை ஒருவர் கடந்த 6ஆம் திகதி வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கிளிநொச்சியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன்கொள்ளையடிக்கப்பட்டஒருதொகைத்தங்கநகையும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்த நபர் யாழ்ப்பாணத்தில் நடந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பான வழக்கு ஒன்றுக்காக யாழ்.நீதிமன்றில் முற்படுத்தக் கொண்டு சென்றபோது தப்பித்து சென்றிருந்தார். யாழ்.நீதிமன்றத்தால் அவருக்கு எதிராக 7 பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு தப்பிச் சென்ற நபர் மன்னார், செட்டிகுளம், கொழும்பு, திருகோணமலை, கிளிநொச்சிப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்துள்ள நிலையில், 4 மாதமாகப் பொலிஸாரின் தீவிர தேடுதலின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ-100)

# தேர்தல் பணிகளுக்காக 1337 இ.போ.ச. பஸ்கள்

கொழும்பு, பெப்.09

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்களிப்புக்காக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஆயிரத்து 337 பஸ்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பஸ்கள் தேர்தல் அதிகாரிகள் வாக்குப்பெட்டிகளை எடுத்துச்செல்வதற்கும் பாதுகாப்புப் பணிகளுக்கும் பயன்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வாக்களிப்பு நிலையங்களில் கைபேசி பாவனைக்குத் தடை

கொழும்பு, பெப்.09

நாளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு இடம்பெறும் நிலையங்களில் கையடக்கத்தொலைபேசிப் பயன்பாடு தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெறும் பகுதியில் கையடக்கத்தொலைபேசியைப் பயன்படுத்தல், காணொளி எடுத்தல், படம் எடுத்தல், புகைத்தல், மதுபானம் அருந்துதல் போன்ற செயல்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.